ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௨௮ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௫, தை பிப்ரவரி, 1954. | பரல் ௬

தமிழக வரலாறு மாநாடு*

ஆர். கே எஸ். படத்திறப்பு

தமிழக வரலாறு மாநாடு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகச் சார்பில நடைபெற்றது. 24-1-54 ஞாயிறு காலை 9-மணிக்கு மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கின. சுந்தர ஓதுவா மூர்த்திகளின் இறை வணக்கம், தமிழ்த்தாய் வணக்கப் பாடல்களுடன் மாநாடு தொடங்கியது. சென்னைப் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரைப் பிள்ளையவர்கள் முதலில் இந்திய அரசாங்க முன்னாள் பொருளமைச்சராக இருந்து மறைந்த சர். ஆர் கே. சண்முகம் செட்டியார் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றினார்கள்.

“இந்திய இமயத்தின் சிகரத்தைப்போல நம் நாட்டு அரசின மணிமுடியாக விளங்கியவர் ஆர்.கே சண்முகம் செட்டியார் ‘ஆர் கே. எஸ்.’ என்று 3 எழுத்துக்களைக் குறித்தவளவிலே ஆர் கே சண்முகம் செட்டியார் என்பதை அறியாத மக்கள் உலகிலேயே இல்லை என்று சொல்லத் தக்க புகழின் சிகரத்தை அடைந்திருந்தார் இங்ஙனம் பெயரை எழுத்தால் குறித்த வளவில நாட்டு மக்கள் அறியும நற்புகழ் பெற்றவர் மிகச் சிலரே. திருவள்ளுவரைப்போலத் தமிழகத்திற்குப் பெரும் புகழைத்

*நெல்லையில் நடைபெற்ற தமிழ்த் திருவிழாவில் இரண்டாம நாள் நிகழ்ச்சி.

தேடித் தந்தவர். இந்தியாவின் புகழுச்சியிலும் உலகின் புக ழுச்சியிலும் தாம் விளங்கிய காலத்தும் தாய்மொழியாம் அமு தத் தமிழ்மொழியின் பெருமையை மறக்கவில்லை. அளவற்ற அயல்நாட்டுச் சிறப்புக்களை அடைந்த காலத்திலும் அருந் தமிழை மறந்தாரில்லை. தமிழன்னையின் காலணியாய்த் திகழும் நெஞ்சையள்ளும் சிலம்புக்குத் தெள்ளிய உரையெழுதி வெளி யிட்டார் உலகில் நாம் வாழ்ந்து பயனில்லை உலகம் நம் மிடையே வாழவேண்டும் அங்ஙனம வாழ்ந்து காட்டியவர் பொருளியற் பேரறிஞர் சர். ஆர். கே எஸ். அவர்களைப் பின் பற்றி நாமும் உலகறிந்த மக்களாக வேண்டும்,'' என்று ஆர். கே. எஸ். படத்தைத் திறந்து வைத்த பிள்ளையவர்கள் சொன் னார்கள்.

மாநாட்டுத் தொடக்கவுரை

கா. அப்பாத்துரைப் பிள்ளையவர்கள், தமிழக வரலாறு மாநாட்டுத் தொடக்கவுரையாகக் கூறியன: இவ் உலகைப் படைத்த பெண் ஒரு சிறுமி என்று கற்பனை செய்து பாருங்கள். அவள் சிறு விளையாட்டாகவே இந்த உலகைப் படைத்திருக்க வேண்டும். அவள் முதலில் பல பெண்களைப் படைததாள்-அப் பெண்கள் தமமைப் படைத்த சிறுமியை அக்காள் என்றனர். அதன் பின் படைக்கப் பெற்றவர்கள் தாய் என்றார்கள். இங்ங னம் தாயாகவும் தமக்கையாகவும் விளங்குவதே நம் தமிழகம்.

ஆறு திருமுகங்கள் கொண்டு உலகைப் படைத்தான் இறைவன் இன்று தமிழுலக வரலாற்றைக் கல்லூரியின் நல் லறிவுத திருமுகங்கள் ஆறு தீட்டிப் படைக்கின்றன. நம் வர லாறு மிகவும நீண்டது. உலகின் முக்காற்பங்குச் செல்வம் இத் தமிழுலகில் இருந்தது. எந்த நாடு தமிழகத்தைச் சார்ந் திருந்ததோ அநத நாடே நாகரிகத்தில் நனிசிறநது விளங்கியது. தமிழகம் நாகரிகவொளி பரப்பும் நற்கதிரோனாகப் பண்பாட்டில் மேம்பட்டுத திகழ்ந்தது வள்ளுவர் வகுக்கும நாட்டின் இலக் கணம் அனைத்தும ஒருங்கு அமைநதது நம் தமிழகம் ஒன்றே! உலகில் பெரும்பான்மையான மொழிகள் பிற மொழிச் சார்பு பெற்றவை நம் தமிழ் பிற மொழிச் சார்பின்றித் தனித்தியங் கும் பேராற்றல் பெற்றது. இத்தகைய தமிழகத்திற்குச் சிறந்த

வரலாற்று நூல் இல்லாத பெருங்குறையைப் பேராசிரியர்கள் அறுவர் இந்த நாளில் நீக்கியருளினார்கள். இந்த நூற்றாண்டு தமிழகத்திற்குச் சிறப்பாகக் குறிப்பிடத் தக்க பகுதியாகும். பேறிஞர்களாகிய மறைமலையடிகளார், திரு. வி. க., ஆர். கே. எஸ், பண்டிதமணி ஆகியோர் வாழ்ந்த ஊழியிது. வரலாற்றில் குறிப்பிடத் தக்க பல அரிய நிகழ்ச்சிகளில் நம் தமிழக வரலாற்று நூலின் தோற்றமும் ஒன்றாகும்.

சொற்பொழிவுகள்

பின்னர் தமிழக வரலாற்றில் 'சங்ககாலம்' என்பது பற்றிப் பண்டிதவித்துவான் தா. மாசில்லாமணி நாடார் அவர்கள் பேசினார்கள 'தமிழ் ஆட்சி மொழியா?' என்பது பற்றிக் கழகத்தார் சிறு உரையாடல் நிகழ்த்தினர். 'பல்லவர் காலம்' பற்றி வ பொன்னுசாமிப் பிள்ளையவர்கள் பி. ஏ., சொற்பொழிவாற்றினார்கள். 'சோழர் காலம்' பற்றி ரா. சேஷாசலம் அவர்கள எம். ஏ, சொற்பொழிவாற்றினர்.

இம்மூன்று சொற்பொழிவுகட்குப் பின்னர் நெல்லைமாவட்ட ஒறுப்புமன்றத் தலைவர் எஸ் ஏ. அய்யாச்சாமி செட்டியார் எம். ஏ., பி. எல். அவர்கள் 'தமிழக வரலாறு' என்ற நூலை அரங்கேற்றிப் பேசினார்கள. திரு. செட்டியார் அவர்கள் தமது அரங்கேற்ற உரையில், "கழகங்கள் பலவற்றை நடத்திய அனுபவமுடையவன் யான். ஆதலின் இக் கழக நிகழ்ச்சிகள் நிகழும் முறையைக் கண்டவளவில் வியந்து மகிழ்ந்து இம் மாநாட்டை நடத்திவைக்கும் அருணகிரி இசைக்கழகத்தாரைப் பெரிதும் பாராட்டுகிறேன்; இனி, இன்று நமக்கு இன்றியமையாத 'தமிழக வரலாறு' நூலொன்றை வெளியிட்டுதவும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக ஆட்சியாளர் வ. சுப்பையா பிள்ளையின் ஒப்பில்லாத திறமையை ஆர். கே. எஸ். அவர்களே பலகால் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். காலத்திற்கேற்ற பணியைக் கவனமுடன் செய்பவர்கள் சுப்பையா பிள்ளை. மேல்நாட்டுப் பதிப்பகங்களில் வெளியாகும் கவர்ச்சியான நூல்களைப்போல் தமிழகத்தில் கண்ணைக்கவரும் கட்டடங்களுடன் தமிழ்நூல்களை வெளியிடுவதில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் திறம்பெறப் பணிசெய்து வருகின்றது. சிறந்த நூல்களைத்

தக்காரைக்கொண்டு எழுதுவித்துப் பழுதற்றமுறையில் பிழையில்லாத வகையில் பேரழகுடன் வெளியிடுவதில் வ சுப்பையா பிள்ளை மிக வல்லவர். அவர்கள் கழக வாயிலாக வெளியிடும் அழகிய பதிப்புநூல்களைப் பார்த்த பிறகுதான் தற்கால இளைஞர்க்குத் தமிழார்வம பெருகியுள்ளதென்னலாம். தமிழில் எனக்கு மிக்க ஆர்வமுண்டு. ஆதலின், தமிழ் ஆட்சிமொழியாக வேண்டும் என்பதை மிகவும் விரும்புகிறேன். எனது இப்போதைய பணி, நூலை வெளியிடுவதாதலின 'தமிழக வரலாறு' என்னும் இந்த நூலைப்பற்றிச் சில கூற விருமபுகிறேன.

"இந்த நூல் வரலாற்றுப் பேராசிரியர்கள் அறுவரைக் கொண்டு ஆராய்ச்சித்திறம்பட அமைத்துள்ளனா நலலமுறையில் அழகிய கட்டடத்துடன் அமைநதுள்ளது தற்போதைய தமிழகததிற்கு மிகததேவையான தெளிவான நூல். இதன் விலை சிறிது அதிகம் என்று கருதுகிறேன் அங்ஙனம அமைவதன் காரணம நூலை வாங்குவாரின எண்ணிகைகையைப் பொறுத்திருக்கிறது. மேனாட்டவர் எவரும ஒருவா வாங்கிய நூலையோ செய்தித்தாளையோ மற்றவர் வாங்கிப் படிப்பதில்லை. தமக்கென்று தனிததவொன்றையே விலைகொடுதது வாஙகுவர். நம் நாட்டிலோ ஒருவா வாஙகியதை நூறுபேர் படிப்பர். வாங்கியவொருவரிடம் அவர் படிததபின்னர் வாங்கிப் படித்துக் கொள்ளலாம என்ற குறுகிய எண்ணம் பெருகியவாகளே பலராக உளர். அந்த நிலை மாறினல் வ. சுப்பையா பிள்ளையவாகளும் கழகப் பதிப்புக்களைக் குறைந்த விலையில பதித்துத் தருவார்கள். சிறந்த நூல்களை எலலோரும் வாஙகும் நிலை நம நாட்டில் மலாநது, குறைந்தவிலைக்கு உயர்ந்த நூல்கள் கிடைக்கும் நிலையேற்படவேண்டும் என்று கூறி, இன்றைய 'தமிழக வரலாறு' சொற்பொழிவு நூலை உங்கள் முன்பு வெளியிடுகின்றேன். தமிழ்நாட்டு மக்கள் எல்லோரும் நம் நாட்டு வரலாற்றை நன்கு உணரவேண்டும் என்னும் நல்லெண்ணத்துடன் வாங்கி ஆதரிக்க வேண்டுகிறேன்," என்று கூறினர்.

இறுதியில் 'தமிழ் ஆட்சிமொழித் தீர்மானம்' ஒன்றைக் கழக ஆட்சியாளர் வ. சுப்பையா பிள்ளையவர்கள் கொண்டு வந்து விளக்கிப்பேசினர். அத்தீர்மானம் மேல்சுட்டசபையில்

ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி ஆ. கசபதி நாயகர் பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி., அவர்களால் 5-1-54-ல் அறிமுகப்படுத்தப்பெற்றுச் சென்னை அரசாங்கக் கெசட்டிலும் வெளியிடப்பெற்ற 'தமிழ் ஆட்சிமொழி மசோதா'வை உடனடியாகச் சட்டமாக்குமபடி சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள இம்மாநாடு தீர்மானிக்கிறது. இத்தீர்மானத்தை மாநாட்டில் கலந்துகொண்ட பலலாயிர மக்களும ஒருமனதுடன் ஆதரித்தனா.

கடைசியில அருணகிரி இசைக்கழகத்தாரால் 'வறியவா தலைவர்' என்னும் நாடகம நடித்துக் காட்டப்பெற்றது. அத்துடன் காலை நிகழ்ச்சி முடிவடைந்தது.

திரு வி. க. படத்திறப்பு

மீண்டும தமிழக வரலாறு மாநாட்டு மாலை நிகழ்சசிகள் மாலை 5 மணிக்குத் தொடங்கியது முதலில் நெல்லை அரசினர் ஆசிரியப் பயிறசிப் பளளித் தலைவர் இரா. பாலகிருட்டிண முதலியார் பி. ஏ., எல டி., அவாகள திரு. வி. கலியாணசுநதரனாரின் திருவுருவப் படததைத திறநதுவைத்து, அப் பேரறிஞரின் சிறப்பியலபுகளையும் தேசததொண்டு மொழித்தொண்டுகளையும விளக்கிப் பேசினர்.

அதன் பின்னர்த தமிழக வரலாற்றில் 'பாண்டியர் காலம்' என்பதுபற்றி ஞா. துரைசாமிப் பிள்ளை எம். ஏ எல் டி. அவர்களும் 'நாயக்கர்காலம' என்பதுபற்றி ஆ செபரத்தினம் எம் ஏ. அவர்களும், 'ஆங்கிலேயர் காலம்' என்பதுபற்றிச் சிவ. இராமச்சந்திரன் பி. ஏ. (ஆனாஸ்) அவர்களும் சொற்பொழிவாற்றினர். இடையே 'மலையாள ஆடையில் தமிழ்' என்ற தலைப்பில் ஆலப்புழை, சூ சுப்பிரமணிய பிள்ளையவர்கள், பழைய மலையாள இலக்கியங்கள் எழுத்துக்களால் பெற்ற வேற்றுமையேயன்றி, ஓசையால்—உச்சரிபபால் தமிழே என்பதை மலையாளப் பாடல்கள் சிலவற்றின் துணைகொண்டு விளககினர்கள். பின் 'கொடைமடம்' என்ற நாடகத்தை அருணகிரி இசைக்கழகத்தார் நடித்துக் காட்டினர். முடிவில் மாநாட்டுத் தலைவர் கா. அப்பாத்துரைப் பிள்ளையவர்கள் தொகுப்புரை வழங்கினர்கள். கழக ஆட்சியாளர் வ. சுப்பையா பிள்ளையவர்களின் நன்றியுரையுடன் மாலை நிகழ்ச்சி முடிவுற்றது.

இரவு நிகழ்ச்சிகள்

மீண்டும் இரவு 9-30 மணிக்கு மூன்றாவது பகுதி நிகழ்ச்சி தொடங்கியது. முதலில் டாக்டர் மு வரதராசனார் எழுதிய 'நன்மை எங்கே?' என்ற நாடகத்தை அருணகிரி இசைக்கழகத்தார் நடித்துக் காட்டினர். இந் நாடகத்தின்பின் 'கண்ணகி கதை' வில்லுப்பாட்டு நடைபெற்றது நெல்லை வில்லிசைச் செல்வர் ஐயன் பிள்ளையவர்கள, அ க. நவநீதகிருஷ்ண பிள்ளையவர்களால எழுதப்பெற்று சை. சி. கழகத்தார் வெளியிட்டுள்ள 'கண்ணகி கதை'யைக் கேட்பவர்மனம மகிழ மிக அழகாக வில்லிசையில் பாடிக்காட்டினர் வில்லுப்பாட்டு முடிவில் வ. சுப்பையா பிள்ளையவர்கள், வில்லிசைப் புலவர் ஐயன் பிள்ளையவர்கள் திறமையைப் பாராட்டிப் பேசி 'வில்லிசைச் செல்வர்' என்ற பட்டம பொறித்த வெள்ளிப் பதக்கம ஒன்றையும் பரிசாக வழங்கினர்கள். அதன் பின்னர் 'கடமை எங்கே' என்ற டாக்டர் மு. வ. அவர்களின் மற்றொரு நாடகத்தை அருணகிரி இசைக்கழகத்தார் நடித்துக் காட்டினர். இரவு 12 மணிக்குத் திரு. கு அருணசலக் கவுண்டர் அவர்களின் நன்றியுரையுடன் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

—இதழாசிரியர்.

கடவுள் காட்சி

இன்றைய உலகம் கடவுள் நிலையைக் கருதாது திரிதருகின்றது. கடவுள் என்ற பெயரே 'கடத்தல' என்னும் பொருளைத் தருவதாகும். கடத்தல், எதைக் கடத்தல்? உலகநிலையை, உலகக் கட்டினுள் அடங்காது மக்கள் முதல் எண்ணிறந்த உயிர்களின தன்மைகட்கு அப்பாற்பட்டு நிற்றலே கடத்தல். இது, அவைகளின மனம், மொழி, உடல் இவைகளைக் கடத்தலாம். இக் கடத்தல் எனும பெயருள்ளதொன்றே கடவுள் என்னும் செம்பொருள். இதன தன்மையை நாம கட்புலன் கொண்டோ, செவிப்புலன் முதலியவற்றைககொண்டோ அறியமுடியாதொழியினும், நம உயிரினுக்கு உயிராயக்கலந்து ஒன்றிநிற்பதை உயிர் உணர்வால் அறிகின்றேம் அலலமோ? அதுவே, அதன காட்சி. அக காட்சியைக் கருத்தில் நிலையாகக்கொண்டு கருத்தகருத நம மனத்துள் உள்ளொளி தோன்றும். அவ்வொளியில் தோய்ந்து இன்புறுதலே 'மக்கள் தாமே ஆறறிவுயிர்' என்பதற்கு ஏற்ற சான்றும், சான்றாண்மையும் ஆகும்.

—செல்லூர்க்கிழார்.

கன்னன் கண்ட கனவு[1]

[கோபாலை. திரு. வே. பெருமாள்]

நிலைமண்டில ஆசிரியப்பா

ஓரறி வுயிர்முதல் ஆறறி வுயிர்வரை
ஈரமுள் நெஞ்சுடன் இரங்கிக் காக்கும்
பெற்றியை யுடையதோர் பெருங்குணச் சீலன்;
நற்றமிழ் ஓர்ந்த நன்னடைச் செல்வன்;
அறிவால் நிறைந்த அருங்குணச் செயலால்
அந்தணன் என்ன அழைக்கத் தக்கோன்;
கன்னன் என்னும் பெயரை யுடையோன்;
ஒருநா ளிரவு பெருமான் இறைவன்
கருணை நினைந்துபின் கண்துயின் றனனே
நனவுபோற் றோன்றும் கனவினி லொருவன்
கையினி லோலைக் கற்றை யுடையன்
பையினி லெழுதும் ஆணி யெடுத்து
இவன்முகம் நோக்கி யேகுங் காலை
"ஐயா! என்னை யறிந்துசெல் கின்றனை?"
என்றே யிரந்து கேட்டான் கன்னன்.
"ஐய! நானோ இறைவனி டத்தில்
ஓவா அன்பா யுள்ளவர் பெயர்களை
குறித்தே யேகிக் கொடுசெலுங் கூலி"
என்றே கூறி யேகுங் காலை,
"என்பே ருளதோ? நுங்கள் குறிப்பில்"
என்னவும் "இல்லை" என்றறைந் தாரிடம்,
"ஐயா! என்னை இறைவ னிடத்தில்
பொய்யா அன்பு போக்குவ னென்றே
குறியா விடினும் இரியா மல்நான்
அவனரு ளாலே புவனந் தோன்றும்
ஆறறி வுயிரினும் பொருந்திய அன்பினன்
என்று கினும்நீ குறித்தே கும்மே"

1. அறிஞர் Leigh Hunt எழுதிய "Abou Ben Adham" என்னும் பகுதியின் பெயர்ப்பு.

எனுங்கால் வந்தவர் எங்கோ மறைந்தார்
மற்றோர் சமயம் வந்தனன் அறிஞன்
பற்றோலை தன்னைப் பார்க்கக் காட்டினன்
என்னே! அதிசயம் என்னே! அதிசயம்
பொன்போ லிவன்பேர் பொலிந்தது தலைப்பில்
எய்தற் கரிதாம் எழின்முதற் கண்ட
மகிழ்ச்சியா லவன்கண் மலர்ந்தன மாதோ
இதனா லன்பீர்! இறைவன் படைத்த
எல்லா வுயிரையும் கொல்லா தொழிக
தன்னுயிர் போல மன்னுயிர் தம்மை
இன்னுயி ரெனவே இரங்கிக் காக்க
தன்னைக் காட்டினும் மன்னுயிர் கட்கு
இன்பரு செயல்தான் இறைவன் விழைவே.

கதைச் சுருக்கம் :—மன்னுயிரையும் தன்னுயிர்போல மதிக்கும் தன்மை வாய்ந்தவன் கன்னன் என்ற வொருவன் ஒருநாளிரவில் கண்துயின்றான். அப்போது, ஏடெழுத்தாணியோடொருவன், இவன் முகத்தைப் பார்த்துவிட்டுச் சென்றான். கன்னன், "என்னையா! பார்த்துப்போகிறாய்" என்றான். அதற்கு, வந்தவன், "ஐய! நான் கடவுளிடம் அதிக அன்பு உள்ளவர் பெயர்களைக் குறித்துச் செல்லுமொரு கூலியாள்" என்று சொல்லியவண்ணம் புறப்பட்டான் கன்னன், "ஐயா! என்பேருளதா?" என்றான் அவன் "இல்லை" என்று சொல்லிவிட்டுப் புறப்படத் தொடங்கினன். கன்னன் மறுபடியும், "அடிகளே! என்னை இறைவனிடம் அன்புள்ளவன் என்று குறியாவிடினும் இறைவன் படைத்த உயிர்களிடம் அன்புள்ளவன் என்றாகிலும் குறித்தல் கூடாதோ?" என்று இரந்து கேட்டான் வந்தவன் மறைந்தான். மற்றோர் சமயம் அவ்வடியார் ஏடுங் கையுமாய்த் தோன்றினன் ஏட்டை விரித்துக் காட்டினன். என்னே! அதிசயம். இவன் பெயரே தலைப்பில் காணப்பட்டது. இம் மகிழ்ச்சியின் மிகுதியால் கண்ணை விழித்தான். கண்டது கனவென அறிந்துகொண்டான்

இதனால் நண்பர்களே! எல்லா உயிர்களிடத்தும் அன்போடிருத்தலே, இறைவனிடத்தில் அன்புடனிருப்பதற்கு அடையாளமாகும். என்பதை இதன்வாயிலாய் நன்றாய் அறிந்து கொள்வோமாக. கொல்லா விரதம் நில்லா தோங்குக.

கன்னடமும் தமிழும்

[மயிலை திரு. சீனி. வேங்கடசாமி]

தமிழ் இனத்தைச் சேர்ந்த திராவிட மொழிகளிலே கன்னட மொழியும் ஒன்றாகும். தமிழுக்கு அடுத்தபடியாக மிகப் பழைய இலக்கியங்களைக் கொண்டுள்ள திராவிடமொழி கன்னடமே. முன் ஒரு காலத்திலே, மிகப் பழைய காலத்திலே கன்னடதேசத்தில் தமிழ்மொழி வழங்கிவந்தது. மொழிமட்டு மன்று, தமிழருடைய நாகரிகமும் பண்பாடும் பண்டைக்காலத் திலே கன்னடநாட்டிலே வழங்கிவந்தன. இச் செய்திகளைக் கன்னடத்தில் உள்ள பழைய இலக்கியங்களிலும் பழைய கல் வெட்டுச் சாசனங்களிலும் காணலாம்.

முன் ஒரு காலத்திலே தமிழ்மொழி வழங்கிவந்த கன்னட நாட்டிலே, தமிழ்மொழி திரிந்து உருமாறத் தொடங்கிற்று. தமிழ்மொழி திரிந்தது மட்டுமல்லாமல், வடமொழிச் சொற் களும் அதிகமாகக் கலக்கத் தொடங்கின. இதனால், அந்நாட்டில் வழங்கிவந்த தமிழ், கன்னடமொழியாக மாறிவிட்டது. கன் னட மொழியாக மாறியபிறகு அது இலக்கணம் இல்லாமல் இருந்தது. பிறகு இலக்கணம் எழுதத் தொடங்கினார்கள். முதன்முதல் கன்னட மொழிக்கு இலக்கணம் எழுதியவர்கள், அந்த இலக்கணத்தை வடமொழியிலேயே எழுதினார்கள்!

திராவிட மொழியின் சிறப்பெழுத்துக்களில் ழகரமும் ஒன்றாகும். ழகரம் ஒருகாலத்தில் எல்லாத் திராவிடமொழி களிலும் வழங்கப்பட்டது. தெலுங்கு மொழியில் வழங்கிவந்த ழகரம் மிகப் பழைய காலத்திலே மறைந்துவிட்டது. கன்னட மொழியில் வழங்கிய ழகரம் சிறிது காலத்துக்கு முன்னர் மறைந்துவிட்டது. மலையாள மொழியிலும் தமிழ்மொழியிலும் ழகரம் இன்னும் வழங்கிவருகிறது.

தமிழுக்கு அடுத்தபடியாகப் பழைய இலக்கிய வளம் உடைய திராவிடமொழி கன்னடம் ஆகும். தமிழர், தாய் மொழியாகிய தமிழை நன்கு கற்றபின்னர்க் கன்னட மொழி யையும் கற்பது நன்மை பயக்கும். ஏனென்றால், பல தூய தமிழ் மொழிகள் இன்றும் கன்னடத்தில் வழங்கப்படுகின்றன. அது மட்டுமல்ல, மறைந்துபோன பல தமிழ்ச்சொற்களைக் கன்னட மொழியில் காணலாம். ஆகவே, தமிழர் கன்னட மொழியைக் கற்பது மிகவும் பயனுள்ளதாகும்.

கன்னட மொழியில் உள்ள வடமொழிச்சொற்களை நீக்கி விட்டால், மிகுந்துள்ளவை தூய தமிழ்ச்சொற்களும், சிதைந்து உருமாறிய தமிழ்ச்சொற்களுமாக இருப்பதைக் காணலாம்.

தமிழில் பகரத்தை முதலாக உடைய சொற்கள் பழைய கன்னட மொழியிலும பகரத்தை முதலாக உடைய சொற்களாக வழங்கிவநதன. பிற் காலததிலே, அதாவது புதிய கன்னடத்திலே பகரத்தை முதலாக உடைய சொற்கள் ஹகரமாக மாறின. ஹலாயுதர் என்பவர் வடமொழியிலே 'அபிதானரத்நமாலா' என்னும் நிகண்டு நூலை எழுதியிருக்கிறார். அநத நிகண்டு நூலுக்கு நாகவாமா என்னும் கன்னட பண்டிதர் கன்னட மொழியில் உரை (டீகை) எழுதியிருக்கிறார் இவர் எழுதிய உரையிலே பழைய கன்னடச் சொற்கள் பல காணப்படுகின்றன. தமிழ்ச்சொற்களின் உருவமாக இருந்த பழைய கன்னடச் சொற்கள், பிற் காலததிலே புதிய கனனடததில் எவ்வாறு உருமாறிவிட்டன என்பதைக் கீழே காட்டுவோம். முதலில், பகரத்தை முதலாகக் கொண்டிருந்த பழங்கன்னடச் சொற்கள் புதிய கன்னடத்தில் ஹகரமுதலாகத் திரிந்து விட்டதைக காட்டுவோம்.

தமிழ	பழஙகன்னடம்	புதுககன்னடம்
பசு	பசு	ஹசு
புகை	பொகெ	ஹொகெ
பகை	பகெ	ஹகெ
பால்	பால்	ஹாலு
பொன்	பொன்	ஹொன்
பெண்ணாய்	பெண்ணாய்	ஹெண்ணாய்
பொழுது	பொழ்து	ஹொத்து
பாடு (பாட்டு)	பாடு	ஹாடு
பல்	பல்லு	ஹலலு
பிணம்	பெணம்	ஹெணம்
பெருமை	பெர்மெ	ஹெம்மெ
புண்	புண்	ஹுண்ணு
புழு	புழு	ஹுழு
பாம்பு	பாவு	ஹாவு
புரை (=பாம்புத்தோல்)	பொரெ	ஹொரெ
பூ	பூ	ஹூ
பணை (கிளை)	பணெ	ஹணெ
பிடி	பிடி	ஹிடி
பீலி	பீலி	ஹீலி

தமிழ்	பழங்கன்னடம்	புதுக்கன்னடம்
பக்கி (=பறவை)	பக்கி	ஹக்கி
பித்தளை	பித்தளெ	ஹித்தளெ

மேலும், கன்னடத்தில் பகரம் ஹகரமாகத் திரிந்து வழங்கும் சொற்களைக் காட்டுவோம் :—

தமிழ்	கன்னடம்
பகல்	ஹகலு
பகை	ஹகெ
பசசென்று	ஹசசனெ
பசை	ஹசெ
பட்டி	ஹட்டி
பட்டு	ஹட்டெ
படகு	ஹடகு
படை	ஹடெ
பணம்	ஹண
பருத்தி	ஹத்தி
பத்து	ஹத்து
பனை	ஹனெ
பந்தி	ஹமதி
பந்தல்	ஹந்தர
பன்றி	ஹந்தி
பற	ஹற
பலகை	ஹலகெ
பசி	ஹசி
பழைய	ஹளெய
பெரிது	ஹிரிது
பொடி	ஹுடி
பூரணிமை (முழுநிலா)	ஹுண்ணிமெ
புற்று	ஹுத்து
புரி (கயிறு)	ஹுரி
பொரி	ஹுரி
புலி	ஹுலி
புளி	ஹுளி
பூட்டு	ஹூடு
பூசு	ஹூசு
பிணங்கு	ஹெணகு
பிணை	ஹெணெ
பெற்றவர் (பெற்றோர்)	ஹெத்தரு
பெண்மக்கள்	ஹெம்மக்களு

தமிழ்	கன்னடம்
பெருமழை	ஹெம்மளெ
பெயர்	ஹெஸரு
பேடி	ஹேடி
புகழ்	ஹொகளு
புகு	ஹொகு
பொங்கு	ஹொங்கு
பொட்டு (வெடித்தல்)	ஹொட்டு
புதர்	ஹொதரு
பொன்று (=கெடு)	ஹொந்து
பொன்	ஹொன்னு
புறத்தெ (வெளியே)	ஹொரகெ
பொறு	ஹொறு
புலம்	ஹொல
புலையன	ஹொலெய
புலைசசி	ஹொலதி
போ	ஹோகு
போத்து (ஆண் ஆடு)	ஹோத
போராடு	ஹோராடு
போல	ஹோலிகெ

தமிழிலே ன்று என்னும ஒலி கன்னடத்தில் ந்து என்றாகிறது, உதாரணமாக :

ஒன்று	ஒநது
மன்று	மநது
பொன்று (=கெடுதல்)	ஹொந்து
குனறு (=குறைதல)	குநது
கன்று	கந்து
பன்றி	ஹந்தி
இன்றைக்கு	இநதிகெ
இன்றிலிருநது	இநதிரிந்த
இன்று	இநது
என்று	எநது
கொன்றை	கொநதெ
கொன்றார்கள்	கொநதரு

இப்போது வழங்கும் கன்னட மொழியில் ழகரம் வழங்குவதில்லை. ழகரத்திற்குப் பதிலாக ளகரம் வழஙகப்படுகிறது. பழைய காலததில் வழஙகிய பழங்கன்னட மொழியில ழகரம் வழங்கப்பட்டது. ஹலாயுதர் இயற்றிய அபிதான ரத்னமாலா

என்னும் நிகண்டிற்கு நாகவர்மா என்பவர் எழுதிய உரையில் பழங்கன்னட மொழியில் ழகரம் வழங்கிய சொற்களைக் காட்டியிருக்கிறார் அவற்றில் சில வருமாறு.—

பழது = பழையது, மழெ = மழை, வாழெ = வாழை, தாழெ = தாழை, கோழி = கோழி, தேழ் = தேள், கூழ் = கூழ் (உணவு), கௌங்குழ் = அகருள், புழு = புழு, அழ்கெ = அழுகை, நீரழ்கெ = நீர்வேட்கை, தொழுதனை மகம = வேலைக்காரியின் மகள், பழெவாது = ஐதிகம், பழையவழக்கம்.

நாகவர்மா, மற்றும் பல சொற்களை (ழகர எழுத்துள்ள சொற்களை) கூறுகிறார் அவற்றின் பொருள் விளங்கவில்லை. அறிஞர் நுணுகி ஆராய்ந்து பொருள் கண்டுபிடிப்பார்களாக. அவர் கூறிய சொற்கள் வருமாறு:—

மரத போழலெ, மரதபீழல, உரமிழி, ஜேனநோழம், உமித, ஸ்நேஹமாழவவநம, இழியலிக்குவுது, போழிகெ, பழியிகெ, ஸாழெ, புழ, பெழவம, அகழ்தெயநீர், நெகழு, அகழதுது, பழிகம, கிழலபட்டுது, போழிஸாஹ, முகுழெமுகுழெ, பழிஸஹ, குழிதெவறு, முய்யம முகுழ்சசவுது, பிழதுது, கிவுழ்ச்சவுது, உழியதுது, அழிகண்ணு, இதிரேழ்வுது, லேஸமாழ்வுது, எழிசததிரபபுது, நெகழ்கெ.

புதிய கன்னடமொழி பழைய ழகரத்தை மாற்றி அதற்குப் பதிலாக ளகரத்தை வழங்குகிறது. அவ்வாறு வழங்கும் சில சொற்கள் வருமாறு:—

அளிவு = அழிவு, அளு = அழு, அளுகு = அழுகு, ஆள ஆளெ = ஆழம, ஆளவாரு = ஆழ்வார்கள், இளி = குழி, இறங்கு தாழ்வு, ஈளு, எளெ = இழு, உளு = உழு, எளெ = இழை, ஊளிகெ = ஊழியன, ஏளு = ஏழு, ஏளு = எழு, எழுந்திரு, ஏளிஸ = எழுப்பு

கீழ்க்கண்ட கன்னட சொற்களில் பகரம் ஹகரமாகவும் ழகரம ளகரமாகவும திரிந்துள்ளன:—

ஹளது = பழையது, ஹளதி = பழுப்பு, ஹளமெ = பழைமை, ஹளி = பழி, ஹாளு = பாழ், ஹள, ஹளு = புழு, ஹொளெ = புழை, ஆறு, ஹொகளு = புகழ், ஹளெகன்னட = பழய கன்னடம.

தமிழமொழியை நன்கு கற்றுததேர்ந்தவர் கன்னட மொழியையும் நன்கு கற்று ஆராய்ச்சி செய்வார்களானால், இதுபோன்ற பல செய்திகளை அறியக்கூடும். அன்றியும்

தமிழில் வழக்கொழிந்த பல தூயதமிழ்ச் சொற்களைக் கன்னட மொழியில் காணலாம். உதாரணமாகத் திங்கள், தகர் என்னும் சொற்கள் தமிழ் இலக்கியங்களிலே வழங்கப்படுகின்றன. இவை இப்போது மாதம் என்றும் ஆடு என்றும தமிழில் வழங்கப் படுகின்றன இச் சொற்கள் கன்னட மொழியில் திங்களு என்றும் டகரு என்றும தினசரி வழக்காக (பேச்சுவழக்காக) வழங்கப்படுகின்றன. திராவிட மொழி ஆராய்ச்சி செய்கிறவர களுக்குக் கன்னட மொழி பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தமிழர் முதலில் தாய மொழியாகிய தமிழை நன்கு கற்றுப் பின்னர் கன்னடம், மலையாளம், தெலுங்கு முதலிய திராவிட இனமொழிகளைக் கற்று ஆராய்ச்சி செய்து தமிழை வளம்படுததுவாராகளாக.

தமிழ் மகவு தாலாட்டு

[புலவர், திரு. ராம. பெரியகருப்பன்]

ஆராரோ ஆரிரோ ஆராரோ ஆரிரோ!

கன்னித் தமிழில்நீ கடைவாய அமுதூற்ற
அனபே அழகுருவே ஆரமுதே எனழுதாய்?

தணணீா முகம்தழுவும் தாமரைபோல் நின்முகததுக
கணணீரைக் கொட்டிக கதறி அழைததுமேன?

அல்லிப்பூ வாய்திறந்து அமமாஅ எனவழைதத
சொலலிறகே வந்துவிட்டேன சோாந்தேன் அழுகினறாய்?

தன்னைத் தமிழனென்று தான்சொலலக கூசுகின்ற
பினனறிவுத் தமிழரிடைப் பிறந்ததற்கோ நீஅழுதாய்?

கனனித தமிழுருவே கற்கணடே நீஉன றன்
சினனக கைகொட்டிச சிரிததுவிட்டால போதாதோ?

இனபக கடலாடி எடுததொரு நலமுததே
அன்புக் கொடிகமழ அலாந்த மலாமணமே!

துன்பந் தொலைந்திடவே தோன்றி வளாவாழ்வில்
அனபை அறமாக்கி அரசாட்சி செயயவநதாய!

கடல்சூழ குமரிமுனை கார்தஙகு வடமலைககு
இடையே வளாநாடு இன்னுணாவே உனறுடு

தொல்லுலக நலவாழ்வு தொடருமவரலாறும்
பலகலைகள மிகவுயாந்த பணபாடும உன்னதுதான!

பெறற்கரிய பேறே பிறர்மனதைத தான்கவரும்
சிறப்புடைய செல்வமே சீரவாழ்வே கணவளராய்!

வள்ளுவர் காலம்

[திரு. கு பரமசிவன்]

க. தோற்றுவாய்

மிகவும் முற்பட்ட காலததில் தோன்றியது என்பதற்காக ஒரு நூலை மேன்மையுடையதென்றோ, பிற்பட்ட காலத்தில் தோன்றியது என்பதற்காகப் பெருமையற்றது என்றோ கூறுதல் இயலாது. நூலின் சிறபபுக்களால் நூல் தோன்றிய காலம் சிறபபுறுமே யன்றிக் காலமொன்றே பற்றி நூல் சிறப்படையு மாறு இலலை ஆயினும இக்காரணம பற்றியே எந்நூலையும் எக்காலததிலும தோன்றியது என்று கூறுதல் அடாது. அவ் வாறு கூறுதல் வரலாற்றுணர்ச்சியையே அழிப்பதாகும்.

திருவாளாகள் கே ஜி. சேஷ ஐயர்,[1] எஸ். கிருஷ்ணசாமி ஐயஙகார்,[2] கே ஏ. நீலகணட சாஸதிரி,[3] வி. ஆர். ராமசந்திர தீக்ஷிதர்[4] ஆகியோரைப் போன்ற வரலாற்றாசிரியரும், நாவலர் சோமசுநதர பாரதியார்,[5] கா. சுப்பிரமணிய பிள்ளை,[6] கே எஸ. ஸ்ரீநிவாசபிள்ளை,[7] எம. எஸ. பூரணலிஙகம் பிள்ளை[8] ஆகியோர் போன்ற தமிழறிஞரும் சங்க காலம ஏறத்தாழக், கி. பி இரண் டாம நூற்றாண்டு எனவும இக் காலததில் தோன்றிய நூல்களில் எல்லாம் எடுத்தாளப்படும் திருக்குறள் கி. மு. இரண்டாவது அல்லது முதலாவது நூற்றாண்டில் தோன்றியதாகும் என்றும் கூறியுள்ளனர். இக் கருத்தே யாவராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டு வநதது. இநநிலையில்தான் எங்கிருந்தோ தோன்றினார் ஒரு தமிழன்பர். புத்தம புதிய கருத்தொன்றைப் புகன்றார். கி. மு. இரண்டாவது நூற்றாண்டிலிருந்த அப்பாவி வள்ளுவரைப் பிடிததிழுத்துக், கி பி. ஆறாம் நூற்றாண்டில் தள்ளினார். அவ ருக்கு அவரது கொள்கையும், அவரது கொள்கைக்கு அவரும் தாம் சான்று. இலக்கியம் அவரை விலக்கிச் செல்கிறது. வர லாறு அவருக்காக வழக்காட மறுக்கிறது. எனவே கல்லூரி வகுப்புக்களிலும் தமிழ் மேடைகளிலும இவர் கொள்கையை

1. Q J. M. S. Vol. XVI, pp. 143 66. Referred to by K. A. N: "The Pandiyan Kingdom"
2. "Beginnings of South Indian History"; "Ancient Indian and South Indian History and Culture"
3. "The Pandiyan Kingdom."
4. "Studies in Tamil Literature and History."
5. "திருவள்ளுவர்."
6. "இலக்கிய வரலாறு." 7. "தமிழ் வரலாறு."
8. "Tamil Literature."

எதிர்த்தனரே யன்றி மறுத்துத் தமிழறிஞர் ஒருவரும் எழுதினரல்லர். உண்மையைப் புரிந்துகொள்ளாத முற்போக்கு எழுத்தாளர் ஒருவர்,[1] அண்மையில் ஒரு கிழமையிதழில் அந்தத் தமிழன்பருக்காகப் பரிந்து வரைந்ததோடு பிற அறிஞர்களை இடித்தும் எழுதியுள்ளார்:

“——அவர்களின் ஆராய்ச்சிதான் காய்தல் உவத்தல் இல்லாத நடுநிலைமையான ஆராய்ச்சி என்பது தீர்மானமான கருத்து. அதனால் என் நண்பரைப் பார்த்து ‘——அவர்களின் ஆராய்ச்சி தப்பு என்று தக்க ஆதாரங்களுடன் நிரூபித்து நீங்கள் ஒரு மறுப்பு எழுதிக் கொடுங்கள் அல்லது எந்தப் படிப்பாளியையாவது விட்டு எழுதச் சொல்லுங்கள். அதை என் பத்திரிகையில் பிரசுரிக்கிறேன்’ என்றேன். என் நண்பர் அந்தக் காரியத்தைச் செய்யவில்லை இன்று வரையிலும் அவர் மறுப்பு எழுதவில்லை அவர் மட்டுமில்லாமல் எந்த ஒரு ஆராய்ச்சியாளரும் தக்க காரணங்களைக் காட்டி ——யவர்களின் ஆராய்ச்சி தவறு என்று நிரூபிக்கவுமில்லை....”

முற்போக்கு எழுத்தாளர் கூறுவனவற்றில் மூன்று “உண்மை”கள் உள்ளன (1) எழுத்தாளரின் நண்பர் தமிழன்பரின் ஆராய்ச்சியை மறுத்தாரல்லர். (2) தமிழன்பரின் ஆராய்ச்சிதான் காய்தல் உவத்தல் இல்லாதது (3) தமிழாராய்ச்சியாளர் எவருமே இதுகாறும் இந்தத் தமிழன்பரின் ஆராய்ச்சி தவறு என்று காட்டினரல்லர்.

இம்மூன்றனுள்ளும் முதலாவது செய்தி வேண்டுமாயின் உண்மையாக இருக்கலாம். ஏனைய இரண்டன் உண்மை நிலையும் ஐயத்திற்கு இடமானதாகும். ஏற்கெனவே கூறியது போன்று எண்ணற்ற தமிழறிஞர் திண்ணமாக இந்தத் தமிழன்பரின் ஆராய்ச்சி தவறென்று பேசியுள்ளனர். வியப்பான நிகழ்ச்சியொன்றை மட்டும் சுட்டிக்காட்ட விழைகின்றேன். சேரநன்னாட்டுத் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற செந்தமிழ்க் கூட்டமொன்றில் சிலம்புச் செல்வரும் தமிழாராய்ச்சியாளர் ஒருவரும் இத்தமிழன்பரின் தலைமையின் கீழேயே இவரது ஆராய்ச்சியை மறுத்துப் பேசினர்; இன்றும் பேசி வருகின்றனர். எனவே மறுப்பாரில்லா மன்னனாக இத்தமிழன்பர் உலவுகின்றனர் என்று கூறுதலும் ஒவ்வாது. இவ்வாறே இவரது காய்தல் உவத்தல் இல்லாத பண்பு பற்றியும் பெருமளவுக்கு ஐயப்பாடுகள் எழுகின்றன.

தமிழில் காணப்பெறும் கருத்தொன்று வடமொழியிலும் உளதாயின் தமிழ் வடமொழியிலிருந்துதான் கடன்பெற்றது

1 கு. அழகிரிசாமி: “முழக்கம்” (2-7-42)

என்றுகூற இயலுமா? "....தமிழ்ச்சொல் வடபாடைக்கட் செல்லாமையானும் வடசொல் எல்லாத தேயத்திற்கும் பொதுவாகலானும்...."[1] என்னும் சேனாவரையப் போக்கு ஆராய்ச்சிக்குப் பயன்படாது. தமிழிலிருந்து வடமொழி கடன்பெறப் பின் வாங்கிற்றன்று என்பதனைக் கால்டுவெல்[2] போன்ற மேனாட்டறிஞரே யன்றித் திருவாளர்கள், P. T. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்[3] போன்ற ஆராய்ச்சியாளரும் தெள்ளத் தெளியக் கூறியுள்ளனர்.

"புத்தம் புதிய உண்மைகளை அறிந்து கொள்ளுதலில் ஆரியர் எப்பொழுதும் ஊக்கமுடையராவர். தமிழ் நூல்களினின்றும் பல உண்மைகளைத் தம் வடமொழியில் மாற்றிக் கொண்டுள்ளனர். பிறகு அவ்வட நூலைத் தமிழ்மக்களிடையே பரப்பினர். அப்பாவித் தமிழர்....அவையெல்லாம் தங்களுடையனவென்றறியாமல் வடமொழியினின்று வந்தன என்று கொண்டு மயங்கினர். இவ்வுண்மையை யாவரும் அறிவர்" என்று திரு. பூரணலிங்கம் பிள்ளையவர்கள்[4] எழுதியுள்ளனர். இச்செய்தி

---

1. தொல். சொல். சூ 401. உரை

2. "I think I shall be able to prove, with respect to one portion at least of the analogies that instead of the Dravidian languages having borrowed them from sanskrit, or both having derived them from a common source, sanskrit has not disdained to borrow them from its Dravidian neighbours"—A COMPARATIVE GRAMMAR OF THE DRAVIDIAN LANGUAGES (1913) p. 42 see also p. 566-575.

3. ' When the speakers of two different languages come in touch with each other, the probablities are that each language will borrow words from the other. Thus the names of articles produced only in South India such as pearls, pepper, cardamom must certainly have been borrowed by Sanskrit from Tamil. Hence Sanskrit maricha, mukta, ela are derived from Tamil miriyal or milagu, muttu, elam; there are other Sanskrit words, borrwed from Tamil wantonly which sanskrit scholars wrongly claim to belong to sanskrit e. g. niram, minam evidently being derived from Tamil nir, min for we cannot imagine that the Tamils were drinking water and eating fish without names for these objects and deferred meaning them till Sanskrit speakers presented them with names for them, many such words can be rescured for Tamil from the bands of Sanskrit Scholars..."—PRE - ARYAN TAMIL CULTURE. p 16.

4. "It is a well known fact that the Aryans, ever anxious to know new truths, embodied them in sanskrit and popularised them. The ignorant Tamilians came in course of time to believe that the truths of the Godhead came to them from the Vedas, Vedangas, and upanishads and that they were none of their ancient heritage."—TAMIL LITERATURE. p. 248.

உண்மையாகலாம் என்பது பிறர்[1] கூற்றாலும் விளங்கும். எவ்வாறாயினும் ஆகுக, இது பிள்ளையவர்களின் தமிழுணர்ச்சியை விளக்குகிறது. ஆயின் இத்தமிழன்பரோ வடமொழியிலிருந்து தான் தமிழ்நூல்கள் கடன்பெற்றன என்று சான்று காட்டாமல் கூசாது கூறிவருகின்றனர். உள்ளபடியே காய்தல் உவத்தல் இல்லாதார் இவர் ஆயின், ஒன்றுபட்ட கருத்துக்களை எடுத்துக்காட்டி எதனினின்று எது வந்தது என்று கூறவியலாது என எழுதியிருத்தல் வேண்டும். இவரோ வடநூலாருக்குத் தமிழ் நூலார் கடமைப்பட்டவர் என்று துணிந்து எழுதுகிறார். வடமொழியிலிருந்து தமிழ் கடன்பெற்றது என்று கூறியதாலேயே இவர் நடுவுநிலைமை பிறழ்ந்தவர் என்றோ, தமிழ்மொழியிலிருந்து வடமொழி கடன் வாங்கிற்று என்று கூறியமையால் பிள்ளையவர்கள் நடுவுநிலைமை பிறழாதவர் என்றோ கூற முன்வருவாரிலர். யாவராயினும் சான்று காட்டி ஒரு கருத்தைக் கூறுவிரேல் தமிழுலகம் அதனை ஒத்துக்கொள்ளப் பின்வாங்காது. ஆயின் இந்தத் தமிழன்பரோ வடநூலிலும் தமிழிலும் உள்ள ஒற்றுமைக் கருத்துக்களை எடுத்துக்காட்டி வடவருக்குத் தமிழர் கடமைப்பட்டவர் என்றெழுதியுள்ளனரேயன்றி வடநூலிலிருந்துதான் தமிழ்நூல் குறிப்பிட்டதொரு கருத்தைப் பெற்றது என்பதற்குச் சான்று காட்டினாரல்லர். இவர் காட்டியவற்றைக் கொண்டே தமிழிலிருந்து வடநூல் கடன்பெற்றது என்று ஒருவர் எழுதுவாராயின் இவரால் மறுக்க வியலுமா? வள்ளுவருக்கும் வடவருக்கும் கருத்தொற்றுமை யுண்டென்று வரைந்து, ஒன்றுபட்ட பகுதிகளை எடுத்தெழுதி, வடமொழிவாணருக்கு வள்ளுவர் கடமைப்பட்டவர் என்று முதன் முதற் கூறிய "புண்ணியம்" திரு இராமச்சந்திர தீக்ஷிதரவர்கட்கே[2] உரியது. தீக்ஷிதர் அவர்களிடமிருந்தே இந்தத் தமிழ் அன்பர் இக்கருத்தைக் கடன்பெற்றார் என்று கூறுவதை இவர் ஒப்புவரா? அன்றி வள்ளுவருக்கும் சாகரட்டீசுக்கும் காணப்படும்

1. "இன்னும் வடமொழியாய ஆரியத்திலும் இந்நூல் மொழிபெயர்க்கப் பட்டுள்ளதென அறிகிறோம். ஆனால் மொழிபெயர்க்கின்ற பேராசிரியர்கள் இந்நூல் வளத்தால் தம்மொழியும் மேம்படவேண்டுமென்னும் விழுமிய நோக்கத்துடன் தாம் மேற்கொண்ட தொழிலைச் செய்ய வேண்டுமேயன்றி, இவ்வாறு தமிழ்நூலை மொழிபெயர்த்துக் கொண்டு, சூழ்ச்சிகள் பல செய்து, இன்னும் சில காலத்தில் தம்மொழியிலேயே இந்நூல் முதல் நூலாக இயற்றப்பெற்றதென்றும் ஆசிரியர் திருவள்ளுவனார் அதனை மொழிபெயர்த்துத் தமிழுலகிற்குத் தந்தாரென்றும் நன்றி கொன்று உயிர்வாழும் நச்சுத்தன்மை தவிர்த்து நன்னோக்கமே தலைப்படுமாயின் தமிழ்நாடு தழைத்தலோடு ஏனைய நாடுகளும் ஏமம் உறும்."—பேராசிரியர். ரா. பி. சேதுப்பிள்ளை : "திருவள்ளுவர் நூல் நயம்" பக். 31—2.

2. "Studies in Tamil Literature and History".

கருத்தொற்றுமையைக்கொண்டு [1]வள்ளுவரிடமிருந்து சாக்ரட்டீஸ் கடன் வாங்கினர் என்று கூறுவதை இத்தமிழன்பர் ஒப்புவரா? காலத்தால் முற்பட்ட வள்ளுவரது கருத்துக்கள், பிற்பட்ட வடநூலிலகாணப்பட்டதால் வள்ளுவரது காலத்தைமாற்ற இத்தமிழன்பர் முற்படுகிறாரேயன்றி வடநூல்கள் வள்ளுவரைப் பின்பற்றின என்று கூறத் துணிகின்றாரல்லர். இதைப் பார்க்கும் பொழுது இவரது நடுவுநிலைமையைப் பற்றி ஐயம் எழத்தான் செய்கிறது.

முதலாவது இத் தமிழன்பரின் தமிழ்நடையே இவ்வையத்தை எழுப்புகிறது. கம்பரைப்பற்றி[2] எழுதும்பொழுது, "பன்னெடுங் காலமாக வட-ஆரிய சமுதாயத்தின் உள்ளத்தே ஊறிக்கிடந்து வான்மீகி மஹரிஷியால உருவமைந்த இராம சரிதம் இப்பொழுது தன் பூர்வகதியை அநுஸரித்துத் தக்ஷிண இந்து சமுதாயத்தின் உள்ளப்பரப்பிலேயும் அழுந்திக் கிடந்து ரஸம் இனிது ஊறிக் கனிவதாயிற்று. புதுவதாகிய மனோ பாவனையால் புதுக்கோலம் புனையப்பெற்றது பாரததேவி அறிதில தெரிந்துகொண்ட புருஷோத்தமனது சிறந்த குண விசேஷங்கள் நன்கு புலப்படுமாறு நூதன சம்பவங்கள் அழகு பெறச் சேர்க்கப்பெற்றன. . ...." என்று வடசொற்களை வட வெழுத்துக்களை நீக்காமலேயே ஆண்டுள்ளார். அதுமட்டு மன்று இவ்வாறு எழுதுவதே உயர்வென்றும் கருதுகிறார் என்பதும் பிற இடங்களில இவர் எழுதுவனவற்றால் விளங்குகிறது. குமரகுருபரரைப்பற்றி எழுதும்பொழுது, "தற்காலத்தார் வடமொழிச் சொற்களை நீக்குதற்குப் பெரிதும் முயன்று வருகின்றார்கள். ஆனால், சுவாமிகள் மிகத் தாராளமாக இச் சொற்களைத் தமது நூல்களில் வழங்கியிருக்கிறார். உதாரணமாக மதுரைக்கலம்பகத்தில் (69),

பால லோசன பானுவி லோசன
பற்ப லோசன பக்த சகாயமா
கால காலதரி சூலகபாலவே
கம்ப சாம்ப கடம்பவ னேசனே.

இங்கு ஒரு தமிழ்ச் சொல்லேனும் காணாமை நோக்கத் தக்கது" என்று வரைகிறார்.[3] இங்குத் தனித்தமிழ் உணர்ச்சி தமக்கு உடன்பாடன்று என்று இத் தமிழன்பர் குறிப்பிடுவ தோடு அமையாது தனித்தமிழ் உணர்ச்சியுள்ள அறிஞரையும்

1. ஒன்றுபட்ட பகுதிகளை வெ. சாமிநாத சர்மா மொழிபெயர்த்த "பிளேட்டோவின் அரசியல்" என்ற நூலில் காண்க.
2. "தமிழ்ச் சுடாமணிகள்" 2nd Edition pp. 137.
3. "தமிழ்ச் சுடர்மணிகள்" 2nd Edition. pp. 189.

தாக்குகின்றார் என்பது நோக்கத்தக்கது. இதுமட்டுமன்று, பிறிதோரிடத்தில் வள்ளுவரையே தமக்குத் துணைக்கு அழைக்கிறார். திருக்குறளில் உள்ள வடசொற்களைக் காட்டி, "இங்குக் காட்டியவையெல்லாம் வடசொற்களை யெடுத்தாளுதலில் வள்ளுவர் விரிந்த மனப்பான்மையுடையவர் என்பதை விளக்கும்" என்று எழுதுகின்றார்.[1] இவையெல்லாம் இவரது வடமொழி விருப்புக்குச் சான்று பகரும். இவையேயன்றித் தற்கால இந்தி எதிர்ப்பாளரைப் பற்றிய இவரது தூற்றுதலும் (Contemptuous reference) குறிப்பிடத்தக்கது. "மேற் காட்டியபடி தமிழ் வடமொழி இரண்டிலும் மிகப் பரந்த கல்வி கேள்வியுடையவர்களாயிருந்த சுவாமிகளது வாழ்க்கை வேறோர் அம்சத்திலும் தற்காலத்தாருக்கு ஒரு லட்சியத்தைக் காட்டுவதாயுள்ளது. இவர் காசிக்குச் சென்று பாதுஷாவின் தாய்மொழியாகிய இந்துஸ்தானியை விரைவில் கற்று, இவ் வரசாங்க மொழியிலேயே பாதுஷாவோடு நேரில் சம்பாஷணைகள் நடத்தினார். காசியில் மடம் ஒன்று அமைத்து, அங்கே இந்துஸ்தானி பாஷையிலும் தமிழிலும் புராணப் பிரசங்கங்கள் செய்துவந்தனர். இது உண்மையே என்பதற்கு இவர் காசியில் அமைத்துள்ள குமாரசுவாமி மடமே தக்க சான்றாகும். சலாம் முதலிய இந்துஸ்தானிச் சொற்களை இவர் ஆண்டிருப்பதும் இங்கே கவனித்தற்குரியது. இந்தி மொழியைத் தமிழ் மக்கள் கற்கவேண்டிய அவசியம் இல்லை யென்றுகொண்டு, 'இந்தி ஒழிக' என்று இக்காலத்துச் சிலர் கூச்சலிடுகின்றனர். இக்கொள்கை சுவாமிகளுக்கு உடன்பாடன்று என்பது இவரது வாழ்க்கை நமக்கு நன்கு தெளிவுறுத்துகிறது."[2] இந்தி எதிர்ப்பாளரைப்பற்றிய இவரது தூற்றுதல் பொருந்துமா? இவர்கள் இந்தி மொழியையே கற்கவேண்டாமென்று கூறுகின்றனரா, அன்றி இந்தி கட்டாயமாக இளைஞர்மீது திணிக்கப் படுதலை எதிர்க்கின்றனரா என்பனபற்றி ஈண்டு ஆராய்ச்சியின்று ஆராய்ச்சி தேவையுமன்று, நாடறியும். இவற்றாற் பெறப் படும் முடிவு தமிழில் இந்திச் சொற்களையும் கலந்து எழுதுதல் வேண்டும், எழுதக்கூடாது என்பார் எல்லாம் கூச்சலிடுவோர் என்பதே இவரது எண்ணம் என்னும் முடிவு—ஒன்றே வேண்டுவதாகும். இவ்வாறு பிறமொழி விருப்பும் தனித்தமிழ் வெறுப்பும் உடைய இத் தமிழன்பரைக் காய்தல் உவத்தல் இல்லாத நடுவுநிலைமையாளர் என்று கூறுவதுதான் முற்போக்கு எனின் அம் முற்போக்குத் தமிழ்நாட்டுக்குத் தேவையன்று.

---

1 Ibid. pp 72.

2. "தமிழ்ச் சுடர் மணிகள்" 2nd Edition. pp. 190.

உ. அறத்துப்பால்

இனி இவரது ஆராய்ச்சியை நோக்குவோம். திருக்குறளில் அறத்துப்பாற் கருத்துக்கள் மனுநீதியிலிருந்தும், பொருட்பாற் கருத்துக்கள் கௌடில்யரது அர்த்த சாத்திரத்திலிருந்தும், காமத்துப்பாற் கருத்துக்கள் வாத்ஸ்யாயனர் காமசூத்திரத்தினின்றும் கடன் பெறப்பட்டவை யென்று காட்டி, இவ் வட நூல்களின் காலத்துக்குப் பிறகே குறள் எழுந்ததாகும் என்று கூறுதலே இவரது ஆராய்ச்சியின் போக்காக உள்ளது.

மனுநீதியை நோக்கியே அறத்துப்பால் எழுந்தது என்று கூறுதற்குச் சான்றாக இரு நூற்களிலும் ஒற்றுமையுடையவாகத் தோன்றும் சில பகுதிகளைச் சுட்டுகிறார். இவை உண்மையிலேயே ஒற்றுமையுடையனவா என்பது ஐயத்திற்கிடமாயுள்ளது.

“தோண்டுகருவி கொண்டு பூமியைத் தோண்டுதலால் ஒருவன் நீர்பெறுதல் போலக் குருவினிடத்துள்ள வித்தையை அவர்க்குச் சேவை புரிந்து மாணவகன் பெறுகிறான் (மனு II. 218) என்று வரும் கருத்தது ‘தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக், கற்றனைத் தூறும் அறிவு’ என்ற குறளில் மிக்க நயம்பட எடுத்துரைக்கப்படுகிறது,” என்று இத் தமிழன்பர் எழுதியுள்ளார்[1]. மனு கூறுவதெல்லாம் “மண் வெட்டியால் தோண்டுபவன் நீர் பெறுதல் போன்று தொண்டுபுரியும் ஆர்வமுடையவன் ஆசிரியரிடமுள்ள கல்வியறிவைப் பெறுகிறான்” என்பதே[2]. பாஷ்யமெழுதிய மேதாதிதி, “தொண்டினால் பெறலாகும் பரிசை இச் சூத்திரம் விளக்குகிறது. ஆசிரியருக்குத் தொண்டுபுரிவதன் வழியாக வேதத்தைக் கற்கவேண்டு மென்பதே இதன் கருத்து. ஒருவன் மண்வெட்டியாலோ பிற கருவிகளாலோ நிலத்தைத் தோண்டினால் நீரைப் பெறுகிறான். உழைக்காவிடில் அதனைப் பெறுவதில்லை. அவ்வாறே ஆசிரியருக்கு ஆர்வமுடன் தொண்டுபுரியும் மாணவன் அவரிடமுள்ள கல்வியறிவைப் பெறுகிறான்” என்று விளக்கம் எழுதிச் செல்

---

1. “தமிழ்ச் சுடா மணிகள்” Second Edition. p. 74.

2. “Manu Smriti” - with the Bhasya of Medhatithi - Translated by Mohamahopadhya Ganganatha Jha M. A., D Litt - vol I. part. II. verse 218; “Just as a man digging with the spade obtains water, even so one who is eager to serve acquires the learning that is in the teacher.”

கிறார்.[1] ஈண்டு மனு, "கருவிகளால் நிலத்தைத் தோண்டுபவன் நீர்பெறுதலைப் போல" என்னும் உவமையை உழைப்பின் சிறப்புக்காக, ஆசிரியருக்குத் தொண்டு புரிவதன் இன்றியமையாமையை விளக்குதற்காகப் பயன்படுத்தியுள்ளார் மனு, பலவிடங்களிலும் மாணவன் ஆசிரியருக்குத் தொண்டு புரிய வேண்டும் எனபதனையும் அவ்வாறு ஊழியம் செய்யாத மாணவனுக்கு ஆசிரியா கற்பித்தல் கூடாதென்றும்[2] வற்புறுத்திச் செல்கிறார் இக் கருத்தை எங்கேனும் வள்ளுவர் கூறியிருக்கின்றனரா? வள்ளுவர் கூறுவதெல்லாம் மக்கட்குக் கற்ற அளவிற்றாக அறிவு பெருகும் என்பதே இவ் விரு கருத்துக்களும் ஒன்றுதல் யாங்ஙனம்? முன்னது ஆரியக் குருகுலக் கல்விமுறைக் கருத்து. ஆசிரியர்க்கு ஊழியம் செய்யச்செய்ய அறிவு பெருகும் என்பதுதான் மனுநீதி வேட்டி துவைத்தலாகவோ மாட்டுமந்தையை ஓட்டிச் செல்வதாகவோ ஊழியம் இருக்கலாம், அங்குக் கற்றலைப் பற்றிய பேச்சேயில்லை. ஆயின் குறளோ கற்ற அளவிற்றாக அறிவு பெருகும் என்றே கூறுகிறது. முன்னது ஒருகுலத்துக் கொருநீதி புகட்டும் கருத்து. பின்னையது எந்நாட்டவரும் எச் சமயத்தவரும் ஏற்றுக்கொள்ளும் பொதுக் கருத்து முரண்பட்ட இரு கருத்துக்களிலும் ஒற்றுமை காணும் இத் தமிழன்பரது ஆராய்ச்சியை உண்மையிலேயே பாராட்டவேண்டும்! உவமைகளாவது ஒத்தனவா? ஒன்று, 'கருவிகொண்டு நிலத்தைத் தோண்டுதல்போல' என்பது. மற்றது 'மணலின்கண் கேணி தோண்டுதல் போல' என்பது. ஆற்று மணலில் ஊற்றுத் தோண்டுதல் எளிது, மண்வெட்டியோ கடப்பாரையோ தேவையில்லை, கையாலேயே பெரும்பாலும் தோண்டிவிட முடியும். தோண்டிய அளவில் வற்றாது நீர் ஊறிக் கொண்டிருக்கும் உழைப்புச் சிறிது; பயன் பெரிது. அவ்வாறே கற்றலுக்காகச் செலவிடும் உழைப்புச் சிறிது; விளையும் அறிவாகிய பயன் பெரிது. இவ் விரு உவமைகளும் ஒன்றுமோ?

(தொடரும்)

---

1. Ibid. verse. 218 Bhasya: "This describes the reward in connection with the entire body of injunction bearing upon the service; and it is commendatory of learning the veda by means of serving the teacher.

Just as a certain man digging the earth by a spade or some such implements obtains water, and he does not obtain it without trouble; similarly the pupil who is eager to serve and attends upon him, acquires the learning that is in the teacher

2. Ibid. verses 109, 112, 113.

கோசர்

[வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனார், மயிலம்]

கோசரைப் பற்றி ஓர் அரிய ஆராய்ச்சி யெழுதியுள்ளார்கள் காலஞ்சென்ற பாஷாகவி சேகர மகாவித்துவான், திரு. இரா. இராகவ ஐயங்கார் அவர்கள். இவ்வாராய்ச்சி புதிய கருத்துக்களைக் கொண்டது. சங்க இலக்கியங்களிற் காணப்படும் கோசர் தமிழர் அல்லர் என்றும், அவர்கள் காசுமீர நாட்டிலும் வத்தவ நாட்டுக் கோச நகரத்திலுமிருந்து வந்தவர்கள் என்றும் ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார்கள். இதனைப் படித்த காலத்தில் ஆங்காங்கே சிற்சில ஐயங்கள் தோன்றின. அவற்றை ஈண்டெழுதின் அறிஞர்கள் கண்ணுற்றுப் போக்கி முடிவு காணுதற்கு வாய்ப்பு இருக்கும் என்றெண்ணியே இக்கட்டுரையினை எழுதுகின்றேம்.

(1) நான்மொழிக் கோசர்

"கோசர் முதலில் கொங்கில் வந்தவரென்றும், பின்னர்க் குடகடற் பக்கத்து மலை நாட்டில் குடியேறியவர் என்றும் துணியப்படும்" என்று கூறி அதற்காதாரங்கள் காட்டி வருமிடத்தில் பின் வருவனவற்றை எழுதியுள்ளார்கள்.

"மதுரைக் காஞ்சியில் இவரை, "நான்மொழிக் கோசர் தோன்றியாங்கு' என்றார். இவ்விடத்து நச்சினார்க்கினியர் "நான்கு வகையாகிய கோசர் வஞ்சின மொழியாலே விளங்கினாற் போன்று" என வுரைத்தார். இங்ஙனம் 'நாற்கோசர் மொழித்தோன்றியாங்கு' எனச் சிதைத்துக் கூட்டாது 'நான்மொழி நாட்டுக் கோசர் தோன்றினாற் போன்று' எனக் கிடந்தபடியே பொருள் கொள்ளலாம் என்க. முற்காலத்து நான்மொழி நாடென ஒன்றுண்டென்பது சாசன ஆராய்ச்சியாளர் கண்டது. இதனைத் "திருவறைக் கல்லும் நான்மொழி நாடும் உடைய வத்தவராயனான விடுகாதன்" (Topographical List of South Indian Inscription No. 213 - 11 of 1906) என்பதனால் அறியலாம். இதன்கட் கூறப்பட்ட திருவறைக்கல் இக்காலத்து நாமக்கல் என வழங்குவதென்று துணியப்படுவது. இதன்கண் கூறிய நான்மொழி நாடு திருவறைக் கல்லுக்குப் பக்கத்ததாமென்பது பொருந்தும். ஈண்டு நான்மொழிகளாவன தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பனவாகும். இந்நான்மொழியும் வழங்குதற்குரிய எல்லையில் இந்நாமக்கற் புறம் இருத்தல் பற்றி இப்பெயர் எய்தியதென்று தெளியலாம்.

இந்நான்மொழி நாடு மழகொங்கின் வடக்கண் உள்ளதனால் ஈண்டு முன் வதிந்து பின் குடகிற் குடியேறிய கோசர் "கொங் இளங் கோசர், குடகக் கொங்கர" எனப்பட்டார் என்று கொள்ளத்தகும்" (கோசர் பக. கூ)

மதுரைக் காஞ்சியில் உள்ள "நான்மொழிக் கோசர் தோன்றியன்ன" என்ற அடியினை நச்சினார்க்கினியர், "நாற் கோசர் மொழி தோன்றியாங்கு" எனச் சிதைத்துக் கூட்டியமைக்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். முதலாவது கோசர் தமது வஞ்சின மொழியினை நிறைவேற்றும் குணத்தினர் என்பதைக் கருதியதாகலாம்

"ஒன்றுமொழிக் கோசர்" (அகம் ககூ.)

"வாய்மொழி நிலைஇய சேணுவிளங்கு நல்லிசை
வளங்கெழு கோசர்" (அகம் உ0௫)

"கோசர் நன்மொழி போல வாயாகின்றே" (குறுந் : கரு.)

என்று கோசர் மொழி, 'ஒன்றுமொழி,' 'வாய்மொழி,' 'நன்மொழி' எனச் சிறப்பிக்கப்படுதலைக் காண்க. இதற்கேற்பவே "நான்மொழிக் கோசர்" என்பதை "நாற்கோசர் மொழி" எனக் கொண்டார் எனலாம்.

இனி இரண்டாவது காரணம் வருமாறு :—

"மழையொழுக் கறாஅப் பிழையா விளையுட்
பழையன் மோகூர் அவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன
தாமேஎந் தோன்றிய நாற்பெருங் குழுவும்

(மதுரைக் காஞ்சி. 507—10)

இவ்விடத்தில் "நாற்பெருங் குழு" என்றமைக்கேற்ப "நாற்கோசர்" எனல் சிறக்கும் என்று நச்சினார்க்கினியர் கருதியிருக்கலாம் என்பது இரண்டாவது காரணம் ஆகும். அவர் நாற்பெருங் குழுவாவன யாவை எனக்கூற வந்தவிடத்தில், "ஐம்பெருங் குழுவில் அமைச்சரைப் பிரித்து முற்கூறினமையின் ஈண்டு ஏனை நாற்பெருங் குழுவையும் கூறினார்," என்றுகூறி ஐம்பெருங் குழுக்கள் இன்னா என்றற்கு இளங்கோவடிகள் கூற்றையும் எடுத்துக் கூறினார். நாற்பெருங் குழுக்கள் புரோகிதர், சேனாபதியர், தூதுவர், ஒற்றர் என்போராவர். வெவ்வேறுபட்ட நாற்பெருங் குழுக்களுக்கு ஏற்ப நாற்கோசர் எனக் கொண்டமையால் கோசரும் நான்கு வகையினராவர் என்று கொண்டே "நான்கு வகையான கோசர்" எனப் பொருள் கூறினார் அவர். அந்நான்கு வகை யாவை?

திரு. ஐயங்கார் அவர்கள் "நான்குமொழிக்கோசர்" எனக் கொண்டது பொருந்துமோ என ஐயுறவேண்டியிருக்கின்றது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழியும் வழங்குதற்குரிய எல்லையில் நாமக்கற்புறம் இருத்தல் பற்றி நான்மொழி நாடு என்ற பெயர் எய்தியிருக்கலாம். ஆனால் நாமக்கற்புறம் எக்காலத்தில் அப்பெயர் எய்தியிருக்கலாம் என்பதைக் கவனித்தல் வேண்டும் அன்றோ? கடைச்சங்ககால முடிவு கி. பி. மூன்றாம் நூற்றாண்டென்பர் ஆராய்ச்சியாளர். கடைச்சங்க காலத்தரசன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்பதும் அவர்தம் முடிபு. கடைச்சங்க காலத்தில் சேரரும் நல்லமுறையில் பேரரசர்களாக இருந்தனர் என்பதும் உண்மையே. கடைச்சங்க காலத்திலேயே மலையாள மொழி உருப்பெற்றதில்லை. எனவே, தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனிடம் மாங்குடிமருதனார் கூறிய பாட்டில், 'நான்மொழிக்கோசர்' என்பதற்கு 'நான்மொழி நாட்டுக்கோசர்' என மலையாள மொழியையும் கொண்டு கூறுதல் ஏற்புடைத்தன்றாம். "மலையாள மொழிக்கு ஏறக்குறைய ஆறு ஏழு நூற்றாண்டு களுக்குமேல் அதிகம் முன்வாழ்வு ஏற்பட்டதில்லை என்று அம் மொழி வலலுநர்களே கருதுகின்றார்கள்" என்பர், திரு க ச. சங்கரராமன் என்பவர். (செந்தமிழே கொடுமலையாளம். பக். ௬௭). அதனால் நச்சினார்க்கினியர் "நாற்கோசர் மொழி" எனச் சிதைத்தது பொருந்தும் என்னலாம்.

> "பறைபடப் பணிலம் ஆர்ப்ப விறைகொள்பு
> தொன்மூ தாலத்துப் பொதியில் தோன்றிய
> நாலூர்க் கோசர் நன்மொழி போல
> வாயா கின்றே" (குறுந் : ௧௫.)

இப்பாட்டில் "நாலூர்க் கோசர்" என்றது ஈண்டு நினைவு கூர்தற்குரியது. "கோசர் : மோகூர்ப் பழையனுடைய நியாய சபையில இருந்த ஒருவகை வீரர். இவர்கள் நான்கு பிரிவி னர்கள் என்று தெரிகின்றது" என்று கூறிச் சான்றாக நச்சி னார்க்கினியர் உரையினைக் காட்டினர், திரு. உ. வே. சாமி நாதையா அவர்கள். "நாலூர் ஓர் ஊருமாம்" என்றும் கூறினர். நாலூர் என்பதற்கு நான்கு ஊர்கள் எனக் கோடல் சிறக்கும் என்னலாம். கோசர் சோழ பாண்டியர்கட்கு உதவி யாக இருந்தனர் என்பதைத் திரு ஐயங்கார் அவர்கள் நன்கு விளக்கியுள்ளார்கள். அதனால் கோசர் பேரரசர்களின் ஓலக் கத்தை அலங்கரித்தவர் என்றும் அவர்க்காக ஒன்றுமொழிந்து உதவியவர் என்றும் பெறலாம். அன்றியும் குறுநில மன்னர்க்

கும் உதவியவர் என்பதையும் "மோகூர் அவையகம் விளங்க.... தோன்றினயன்" என்பதனுல் உணரலாம் அரசர்கள் கோச மரபினரில ஒருவனை மட்டும தம் பக்கல் கொண்டிலர் என்றும் பலரைக் கொண்டனர் என்றும அறியவரலாம. கோசரைப் பற்றி வரும இடம் எங்கும் 'கோசன்' என ஒருமையில் இன்றிக் 'கோசர்' எனப் பன்மையில் இருப்பதே சான்று பகரும்.

"கோசர் துளுநாடு" (அகம் · கரு.)

"காப்புக் கைந்நிறுதத பல்வேற் கோசா" (அகம்: ககங.)

"துனைகா லன்ன புனைதேர்க் கோசர்" (அகம் · உ௧௬.)

"வென்வேல் இளமபல் கோசா" (புறம் · க௬௯)

"வலம்புரிக் கோசா அவைககளம்" (புறம் · உஅ௩.)

என்பன காண்க. கோசர் பலரைத் துணையாகக்கொண்ட அரசர்கள் அவர்களைப் பல ஊர்களிலிருநதும் தேர்நதுகொண்டிருக்கலாம். கோசர் இருநத ஊர்கள ஒன்றற்கொன்று அண்மையில் அமைந்தனவாகும். ஒரு நாட்டில அல்லது வளநாட்டில் அமைந்த ஊர்களுள் நான்கு ஊர்களிலிருந்து தேர்ந்துகொண்ட கோசர்களை அரசாகள் உதவிக்குக் கொண்டனர் என்னலாம். அவ்வாறு நாலூர்களிலிருநது அமைத்துக்கொள்ளப்பட்ட காரணத்தால் அவர்கள் "நாலூர்க் கோசர்" எனப்பட்டனர் எனக் கொள்ளலாம "பறைபடப் பணிலம்" என்று தொடங்கும் குறுந்தொகைப் பாட்டில், "தொன்மூதாலத்துப் பொதியில்" என்பது மோகூர்க்கு அடுத்துள்ள ஆலம்பலம்—அஃதாவது கள்ளக்குறிச்சிச் சேகரத்துள்ள ஆலம்பலம் என்று திரு. ஐயங்கார் அவர்கள் முடிவுகட்டியுள்ளாாகள் எனவே, மோகூர்க் குறுநில மன்னனும் கோசர்களை நான்கூரிலிருந்து தேர்ந்து கொண்டவனுதலும கூடும். எனவே, குறுந்தொகைப் பாட்டில் வந்த நாலூர்க் கோசர் என்பதற்கேற்ப மதுரைக்காஞ்சியில் நாற் கோசர் என்பதும் பொருந்தும் என்னலாம. (தொடரும்)

நயவர்

[திரு. பி. எல். சாமி, பி. எஸ். ஸி]

மனிதன் மனவுணர்வுடையவனாக இருக்கவேண்டும். பகுத்தறிவுடையவனாக இருக்கவேண்டும், பண்பாடுடையவனாக வாழவேண்டும்; சமூகத்தில வாழத் தகுதியுடையவனாக இருக்கவேண்டும; மனவுணர்வு பகுத்தறிவுக்கு அடிப்படை, பகுத்தறிவுடன நடந்தால் ஒழுக்கமுடையவனாகிறான், ஒழுக்கத்தால் பண்பாடடைகிறான், பணபாட்டால் உலகில் வாழத தகுதி பெறுகிறான், இது பற்றியே மக்களை உயர்திணையென்று தமிழிலக்கணம கூறுகின்றது

“மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவு முளவே அஃகிளைப் பிறப்பே” (தொல் மர ・ ௩௩)

‘பிறவு என்றதனால் குரங்கு முதலாகிய விலங்கினுள் அறிவுடையன வெனபபடும மனவுணர்வுடையன உளவாயின அவையும் ஈண்டு ஆறறிவுயிர்,’ என்று பேராசிரியர் கூறியிருககிறார் ஆதலின மனவுணர்வும் அதனால உண்டான பகுததறிவும் இருந்தால் மனிதன் மனிதனாகக் கருதபபடுவான். இலலையேல் அவன வெறும் விலஙகு. பகுததறிவுடைய விலஙகே மனிதன் (Man is a Rational animal) என்று அளவை நூல கூறும. ‘அறிவறிந்த மககள’ (௬௧) என்று வளளுவர் கூறுவதும் இப பொருட்டே.

மனிதனுடைய மனத்தைக் கிரேககாகள் இரு கூறாகப் பிரித்தனா. ஒரு பகுதி வெறும பசிகளால் (காமப பசி, உணவுப் பசி முதலியவை) உநதபபடுவது. இவைகளைக் கிரேக்க தத்துவ நூலார் ‘Hormes’ என்று அழைததனா இப்பசிகள மனிதனை அங்கும் இங்கும அலைக்கழிககின்றது; மற்றொரு பகுதி பகுத்தறிவு. இதைச் செய்யலாம, இதைச் செய்யக்கூடாது என்று உணாததி, இப்பசிகளை அடக்கி ஆளுகிறது (Vide De offieis. Cicero) இபபகுததறிவுடையதை உயாதிணை யென்றும இல்லாததை அஃறிணை யென்றும் நுண்ணிய, சிறந்த எந்த இலக்கியங்களிலும் எம் மொழியிலும் காணமுடியாத பாகுபாட்டைத் தமிழ் மொழியில்தான் காண்கிறோம்.

‘பிறப்பே குடிமை ஆண்மை ஆணடொடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளை உணர்வொடு திருவென
முறையுறக கிளந்த ஒப்பினது வகையே’

என்ற மெய்ப்பாட்டியல் நூற்பாவில் 'உணர்வு' என்பதற்கு 'உலகியலால் செய்யத் தகுவது அறிதல்' என்று பேராசிரியர் கூறுவது கூர்ந்து நோக்கத் தக்கது.

'தக்கவின்ன தகாதன இன்னவென்று
ஒக்க உன்னல ராயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே'

என்று கம்பர் கூறுவதும் இந்த அடிப்படைப் பாகுபாட்டை எடுத்துக் காட்டும்.

மனவுணர்வின்றி வெறும் பசிகளைத் தணித்து வாழ்வன விலங்குகள். அப்பசிகளிலே, விலங்குகள் உணவுப்பசியை இன்றியமையாததாக வாழ்க்கையில் கொண்டுள்ளன. ஆனால் மனிதன் அவைகளைவிட நுண்ணிய உணர்வுகளை நாடி இன்புற்று வாழ்கின்றான். கல்வி கேள்வி உணர்வுகளே ஒருவனை நல்லொழுக்கமுடையவனாய், உயர்திணையாய், உலகில் வாழுந் தகுதியுடையவனாய், பண்பாடுடையவனாய் மாற்றுகிறது. வாய்ப் பசியால் ஆட்டப்படும் மக்களை வள்ளுவர் 'வாயுணர்வின் மாக்கள்' என்று அழைப்பது இது பற்றியே. கேள்வி யுணர்வின்றி நூலுணர்வின்றி வெறும் விலங்குப்பசிகளைத(Animal Instincts) தணித்து வாழும் மக்களை வள்ளுவர் 'விலங்கொடு மக்களனையர்' என்று பிறிதோரிடத்திலும் கூறுகின்றார்.

"வானத்திலுள்ள சிறு பறவைகளைப் பாருங்கள்; அவை விதைக்கிறதுமில்லை, அறுவடை செய்கிறதுமில்லை. அவைகள் நாளை என்ன உண்ணலாம் என்று கவலைப்படுவதுமில்லை; ஆதலால், மனிதன் உணவினால் மட்டும் வாழ்வதில்லை" என்று இயேசு கூறியிருக்கிறார்.

உணவிற்காக, உணவினால், வாழ்ந்தால் மனிதன் மனிதனல்லன் என்பது அவர் கருத்து. உணவுடன் உணர்வும் வேண்டும். எலியைப்போல உணவைத்தேடி உண்பதிலேயே ஆயுளைக் கழிக்காது கல்வி கேள்வியுணர்வுடன் இன்புற மனிதனுக்குப் போதிய ஓய்வு வேளை வேண்டும். அதுவே சோசலிசத்தின் (Socialism) இறுதிக் குறிக்கோளாக இருக்கவேண்டும் என்று பெர்னாட்ஷா ஒரு நூலில் கூறியுள்ளார்.

மனிதனை 'சமூக விலங்கு' (Social Animal) என்று சொல்லலாம். 'உலகியலால் செய்யத் தகுவது அறிந்து' உலகில் வாழ்தலால் சமூக விலங்கு என்கிறோம். ஆனால் அதைவிடச் சிறப்பாகக் கூறவேண்டுமானால் மனிதனைப் பண்பாடுடையன என்று சொல்லவேண்டும். பண்பாடிருந்தால் மனிதன் மனித

னுவான். (While it may not be an adequate definition to say that he is a *Social animal,* he is sufficiently differentiated if described as *Possessing Culture*—Race and culture - unesco Publication) உலகில் வாழுவதனுல் மொழி, பழக்க வழக்கங்கள், நடையுடை பாவனைகள் ஆகியவைகளின் துணையால மனிதன் பண்பாடுடையவனுக மாறுகின்முன்.

மனிதரிலும் உயர்நத பண்பாடுடையவன தாழநத பண்பாடுடையவன் என்று இருவகையாகப பிரிக்கலாம். இலக்கியம், ஓவியம, இசை இவைகளை உணர்ந்து துய்பபவன உயர்ந்த பணபாடுடையவன. வளளுவருட,

‘ விலஙகொடு மக்க ளனையா, இலஙகுநூல
கற்முரோ டேனை யவர்’

என்று கூறுகிமுர்

‘ செவியிற் சுவையுணரா வாயுணர்வின், மாககள்
அவியினும வாழினும என ’

என்று வளளுவர் சினதகேதாடு கூறுவதையும கவனிக்கவேணடும அவர்களையே ‘ அவிசசுவை யின்றி தமிழ்ச்சுவை தேரீர் ’ என்று ஒளவையாா கூறுகிமுர் “ சொறகொண்ட பாவின் சுவை அறிவார் ஈங்கில்லையே ’ என்று கம்பரும் கூறியுள்ளார். ஆதலின் வாய்ச்சுவை யன்றிப் பிற நற்சுவை அறியார் பண்பாடற்றவா. ஆதலின் அவாகள விலஙகுகளே.

மனவுணர்வு, உலகில வாழத் தகுதியுடைமை, பண்பாடு ஆகிய மூன்றும் இல்லாதவை ‘அஃறிணை’ எனபபட்டன. திணை எனில ஒழுக்கம் எனபது பொருள. திணை எனில் சமூகம் என்பதும பொருள் திணை எனில் இவைகளையெல்லாம உள்ளடககிய பண்பாடு (Culture), நாகரிகம (Civilisation) என்பதும் பொருள ஆதலின், உயர்திணை மேற்சொனன மூன்றையும் உளளடக்கி வைததிருக்கின்றது. இவை மூன்றையும இயல்பாகப பெறறும, அதை இழநது மனவுணர்வைக் கெடுதது வாழும வன்கணுளர்களையே வளளுவர் விலங்கினும் கீழாக மதித்து அவாகளைக் ‘ கயவர் ’ என்றழைக்கிமுர் இவர்கள், உயர்திணையுமன்று ; அஃறிணையுமன்று ; தேவர்களுமல்லர் ; நரகருமல்லா , அஃறிணையிலும் தாழ்ந்தவர் ; இவர்களே கயவர்கள.

‘ வாயுணாவின் மாக்கள,’ ‘ விலங்கொடு மக்களனையர்,’ என்று கயவர்களை விலஙகுகள், மாககள என்றும சொல்லாமலே சொல்லி வைததாா வள்ளுவர். பின்னர் ‘ மக்களேபோல்வர் கயவர் ’ என்முர். ஏனெனில் அவர்கள மக்களைபபோலக்

காட்டிப் பிறரை ஏமாற்றுகிறார்கள் மக்களைப்போலவே தோற்று வதில் அவர்களை ஒப்பாரைத் தாம் கண்டதேயில்லை என்றும் வள்ளுவர் கூறுகிறார். ஆனால் வள்ளுவரே,

> "உறுப் பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
> பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு"

என்ற குறளில் தெளிவாகக் கூறியிருக்கிறார். அவர்கள் மக்களை போலிருந்தாலும் மக்களைவிடத் தாழ்ந்தவர்கள். அவர்கள் "அரம் போலும் கூர்மையரேனும் மக்கட் பண்பில்லாவிடில் மரம்போல்வர்" என்று வள்ளுவர் விலங்குகளைவிடத் தாழ் வான ஓரறிவுடை உயிர்களான மரங்களுடன் ஒப்பிடுகிறார் 'புறத்துறுப்பெல்லாம் எவன்செயும்' என்று வள்ளுவரே பிறி தோரிடத்திலும் கேட்கின்றார். யாக்கைக்கு அகத்துறுப்புத்தான் இன்றியமையாதது என்று விளக்குகிறார்.

விலங்குகளுக்கும் கயவர்களுக்கும் இருக்கும் மற்றொரு ஒற்றுமையும் வள்ளுவர் 'கயமை' என்ற அதிகாரத்தில் காட்டியிருக்கின்றார். அச்சம் எனும் அடிப்படைத் தடையைத் தவிர, வேறு எந்த உயர்ந்த சிறந்த தடைகளையும் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் கவனிப்பதில்லை அச்சமெனும் தடையைத் தவிர வேறொரு தடையையும் விலங்குகளும் உணர்வதில்லை. கயவரும் அச்சமே ஆசாரமாகக்கொண்டு கரும்புபோலக் கொல்லப்பயன் படுவர்; சான்றோர் போலச் சொல்லப் பயன் படார், கயவன் சொந்த மனவுணர்வால் உந்தப்பட்டு உலகத்துக்குத் தானாகப் பயன்படான்; சொல்லவும் பயன்படான; ஆனால், கொல்லப் பயன்படுவான், கரும்புபோல. எவ்வளவு அழகான விளக்கம்!

> 'ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
> கூன்கைய ரல்லா தவர்க்கு'

என்று மேலும் இதையே வலியுறுத்துகிறார்.

கயவர்கள் அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சி அஞ்சிச்சாவர். ஆனால், அஞ்சவேண்டுவதற்கு அஞ்சுவதில்லை உலகம் அஞ்சுவது அஞ்சாத பேதைமையை அணிகலமாகப் பூண்டு, அஞ்சாததற்கு அஞ்சும் ஆசாரத்தைக் கொண்டு வாழ்பவர் கயவர் அவர்கள் மனச் சான்று பிறர் அஞ்சுவதற்கு அஞ்சுமாறு பணிப்பதில்லை. பணித் தாலும் கயவர்கள் செவி சாய்ப்பதில்லை ஆதலின் வள்ளுவர் கூற்றுப்படி கயவர் 'நெஞ்சில் அவலம் இலர்'. நன்மை அறிந்த நல்லவர்களைவிடக் கயவர்கள் 'பாக்கியம்' செய்தவர்கள். ஏனெனின் நெஞ்சில் மனச்சான்றால் ஏற்படும் கவலை சிறிதும் இல்லை. அதில் நல்லவரையும் விடக் கயவர்கள் ஒருபடி உயர்ந்தவர்க ளாகத் தோற்றமளிக்கிறார்கள்.

அடுத்த குறளில் வள்ளுவர் கயவர்களைத் தேவர்களைப் போன்றவர்கள் என்று ஒருபடி உயர்த்திக் கூறுகிறார். மனம் போன போக்கெல்லாம் போய், மனச் சான்றின் குத்தல் ஏது மின்றி விரும்பியதெல்லாம செய்வதால் கயவா தமது இச்சைப் படி தங்குதடையின்றி நடககும தேவர் போன்றவர் என்று வள்ளுவர் கூறுகிறார்.

> "தேவர் அனையர் கயவா அவருந்தாம்
> மேவன செயதொழுக லான"

என்ற குறள் மிக நுண்ணிய முறையில் புகழ்வதுபோல் பழிக் கின்றது.

கயவரை விலஙகு அனையர் என்றே வள்ளுவர் கருதினர். கயமை என்ற அதிகாரததில் முதற்குறளில் 'மக்களே போல்வர்' என்று சிறிது உயர்ததினா. 'நனறறிவாரில கயவர் திருவுடையார்' எனறு அடுதத குறளில் நல்லவர்களைவிட உயாநத பேறுடையவர்கள் எனறு மேலும் கயவரை உயர்த்தினர். இறுதியில் விலங்குகளைவிட, மககளைவிட, நலலவாகளைவிட உயாநத தேவாகளே போன்றவர் கயவா என மிகமிக உயர்ததினா. ஒருவனைத தரையிலிருநது குன்றிலேற்றி, குன்றிலிருநது மலையிலேறறி, மலையிலிருநது ஒரே தூககாகக் கொடுமுடியில் வைத்துச் சிறிது தளளிவிட்டாற போல, வள்ளுவா உயர்த்தி உயர்ததி இறுதியில் நிலைகலக்கிக கீழாக்குகிறா இநத நுண்ணிய, நயமான, நாகரிகமான வஞ்சபபுகழச்சியில் வளளுவரை மிஞசினா எவரும் இல்லை.

இதில் மற்றொரு சிறப்பு என்னவென்றால் உலகிலேயே சிறநத அறிவாளிகளில் ஒருவராகக் கருதபபடும அரிஸடாட்டில் (Aristotle) கூட இதுபோன்றே கயவரை 'உலகத்தோடு ஒட்ட ஒழுக முடியாதவா அல்லது தமக்குத தான் போதும், சமூகம் தேவையிலலை என்று கருதுவோா ஒன்று, தேவராய் இருக்க வேண்டும, அல்லது விலங்காய் இருக்கவேண்டும! என்று கூறுகிறா.[1] வளளுவரும் முதலில் விலஙகொடு சேர்ததும கடைசியில் தேவரொடு சோததும கூறி, கயவரை விலஙகினும கீழானவர் என்பதைப் பெற வைத்தார்.

---

1. He who is unable to live in society or who has no need for society must be either a god or a beast'—Aristotle.

வள்ளுவன் சொல்லே வேதம் *

[பேராசிரியர் கா. பொ. இரத்தினம் எம் ஏ., பி.ஓ எல், கொழும்பு.]

இந்தப் பொருளைப் பற்றிப் பேசுதற்கு முன் வள்ளுவ பெருமானுடைய மதிப்பைக் குறைக்கும் ஔவையார் படத்தைப் பற்றியும சில கூறவேண்டி யிருக்கிறது இந்தப படத்தின குறைகளைக் குறிததுப பல அன்பர்கள் ஆவேசததோடு எனக்கு எழுதியிருக்கிறார்கள் "உஙகள் கருத்தென்ன ? வள்ளுவரை இழிவுபடுத்தும இந்தப் படத்தைப் பார்ததுக்கொண்டு தமிழ் மறைக் கழகத் தலைவராகிய தாங்கள் ஏன் பேசாதிருக்கிறீர்கள்?" என்றுங் கேட்கிறார்கள். இன்று என்னுடைய கருததுக்களை இங்கு வெளியிடுகிறேன.

ஔவையார் படம் தமிழ்ப்பாடல்களின் சிறப்பையும், தமிழ்நாட்டின் கலைப்பெருக்கத்தையும், இயற்கை வளததையும் நன்கு காட்டுகிறது. எனினும, அதிலே பல குறைகள் காணப் படுகின்றன. ஒரு குடம நிறைநத பாலினுள இடபபட்ட நஞ்சுததுளிகள்போலச் சில செய்திகள் காட்சியளிக்கின்றன. அதனை உருவாக்கியவாகள் தமிழ்பபுலவர்களின் பெருமையினை யும, தமிழ்இலககிய வரலாற்றையும, தமிழ்நாட்டு வரலாற் றுணமையையும் நன்கு அறிநது தமது கடமையைச் செய்ய வில்லை யென்பதை அப் படத்திலுளள பல நிகழ்ச்சிகள் தெளி வாகக் காட்டுகின்றன.

வள்ளுவர் ஓர் ஏழைபோலவும், சங்கப் புலவர்கள் அறிவிலார் கூட்டம் போலவும் அப் படத்தில் காட்சியளிக்கின்றாகள. ஔவையார் பாடிய ஒரு பாட்டின் முதலிரு அடிகளை ஒரு குட்டிப் புலவர் பாடிய தாகவும் இப்படம் அறிவிக்கிறது.

வள்ளுவர் தம் நூலினை அரங்கேற்றியது பற்றி இப்படம் கூறும் கதை எநத நூலில் உள்ளது ? அல்லது எநத நாட்டில் வழஙகி வருகிறது ? தமது நூலைச சஙகத்துக்குக் கொண்டு சென்று அரங்கேற்ற முடியாத அவ்வளவு கோழையா வள்ளுவர் ? ஔவையார், எழுவென எழுநது, நடஎன நடந்து, சொல எனச் சொல்கிறவர் என வள்ளுவரைக் காட்டவேண்டிய காரணம் யாது ?

சங்கப் புலவர்களைப் "பொய்யடிமை இல்லாத புலவர்கள்" எனவும் "மூவர்கட் கரியான் நிற்ப முத்தமிழ்ச் சஙகத்து

* வதுளைச சைவ பரிபாலன சங்கததில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

தீற்றிருந்த தெய்வப் பாவலர்" எனவும் அறிஞர் போற்றுவர். இத்தகைய பெரும புலவர்களைத் தமிழறிவும பண்பாடும் இல்லாதவர்களாகத் தீட்டிக் காட்டிய மடமைக்கு என்ன சமாதானம் கூறமுடியும்? இக்காலத்தில, தமிழ்ப பேரறிஞர் எனத் தமபட்டமடிக்கும பலருக்குக் குறள் வெண்பாவைபபற்றிய அறிவுசிறிதும் இல்லையெனபது உண்மையே ஆனால், குறள வெண்பாவைப் பற்றி அறியாதவர்கள சங்க காலத்திற புலவர்களாய் இருந்திருப்பார்களா? அரிகண்டம, யமகண்டம என்பன புலமைக் காய்ச்சலும், போலிப் புலமையும் ஏற்பட்ட இடைக்காலத்தில் படைக்கப பட்டனவன்றோ! சங்கப புலவர்களின் நாவில்,

"ஐயா வள்ளுவரே உமக்கு அந்தாதி தெரியுமா?
உமக்கு இலக்கணம தெரியுமா?
உமக்கு எமகண்டம் தெரியுமா?
உமக்கு விருத்தம வருமா?"

என்று, இன்னோரன்ன வினாக்களைத் திணித்ததால் இப் படத்தின மதிபபும் புனிதமும சிதைக்கப்பட்டனவே!

"நன்றி ஒருவற்குச செய்தக்கால்... ...."

எனும் செய்யுள முழுவதையும், இது தோன்றிய காலம முதல் இன்றுவரை ஔவையார பாடியதாகவே யாவரும் எழுதியும் படித்தும் போற்றியும வருகிறார்கள மரபு வழிவந்த இந்த உண்மைக்கு மாறாகப் படத்தை உருவாக்கியவர்கள அதன் முதலிரண்டடியையும ஊர் பேர தெரியாத வேறொரு புலவர் பாடினார் எனறு காட்டிப பெற்ற பயன் யாது? இந்த உண்மையைத திரித்துக் காட்டியதால் மக்களுள்ளத்திலே புததுணர்சசியும் போரார்வமும ஏற்பட்டுள்ளவா? பாடசாலைச் சிறாரிடத்துங்கூட இது மயக்கத்தை உண்டாக்கிவிட்டதே!

சங்ககால ஔவையாரையும இடைக்கால ஔவையாரையும் ஒன்றாக இணைத்துக் காட்ட முற்பட்டதால் ஏற்பட்ட பிழைகளும் கோளாறுகளும பலவாகும சுருங்கக் கூறின் தமிழ் மூதாட்டியாம் ஔவையாருடைய சரித்திரம் திரைப்படமாக்கப் படவில்லை. ஔவையாரைப் பற்றிய பழங்கதைகளும், புதுக் கதைகளும, கற்பனைக் கதைகளும், புராணக் கதைகளும் கலந்து காட்சியளிக்கின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்னாக் கண்ணகி என்றொரு படம் வெளியானது. அதிலே சிலப்பதிகாரம கூறும கண்ணகியைக் காணமுடியவில்லை. இப்பொழுது ஔவையாரைத் தமிழ் மக்களுக்கு அறிமுகம செய்ய ஏழாண்டுகள் அரும்பாடுபட்டுப் பெரும பொருட்செலவில உருவாக்கப்பட்ட படம் பல பிழைக

ளுடன் தமிழ்ப் புலவர்களின் மதிப்பையுங் குறைக்கும் வகையில் காட்சியளிப்பது வருந்தத்தக்கதே. இலகுவில் நீக்கத்தக்க இக் குறைகள் பல இப் படத்தில் இடம் பெற்றிருப்பதை எடுத்துக் காட்டினுல்தான் இனிமேல் உருவாகும் படங்களாயினும் சிறப்பாக அமைவதற்கு வாய்ப்பு ஏற்படுமன்றோ ?

வாழ்விலே மாத்திரமன்றிப் படங்களினும் இவ்வாறு பல பிழைகளும் முரண்பாடுகளும் ஏற்படுவதற்குக் காரணம் நம் மக்கள் ஆராய்ச்சியும் உணர்ச்சியும் இன்றி எல்லாவற்றையும் நம்பி வந்தமையே ஆகும். " இவை யெல்லாம் வேதவாக்குகள் ; கடவுளின் கட்டளைகள், முனிவர்களின் முடிபுகள், இவற்றை நம்புங்கள், நம்புங்கள்; ஆராயாதீர்கள், ஆராய்ந்தால்—ஆட்சேபித்தால் நரகத்திலே புகுவீர்கள்!'' என்று பன்னிப் பன்னி உரைக்கும் நூல்களுக்கும் நம் நாட்டில் குறைவுண்டா? இன்றும் - இந்த இருபதாம் நூற்றுண்டிலும் சாதி நெறி சமய நெறியே என்று கூறும் அறிவிலாரும், இதற்கும் கடவுள் வாக்குக்கள் என்று சான்று காட்டும் சில பேதையரும் நம் நாட்டில் இருக்கிறுர்கள் அன்றே ! இந்த மயக்க நிலைகள் - ஏமாற்றும் விதைகள் - அறிவுக் கொலைகள் நீங்க வேண்டுமெனின், மக்கள் யாவரும் வள்ளுவன் சொல்லே வேதமெனக் கொண்டு போற்றல் வேண்டும்; உண்மையை உணரவேண்டும்; திருக்குறள் வகுக்கும் நெறியில் ஒழுக வேண்டும்

(தொடரும்)

நாணம்

நாணமென்பது ஆடவரிடத்தும் பெண்டிரிடத்தும் சேர்ந்த ஓர் அரும் பண்பு. இது, ஒருவர்க்குப் பொருந்தாத தன்மை தம்பால் உற்ற போது அதற்கு அஞ்சி ஒடுங்கும் உயர்நிலை இப்பண்பை வள்ளுவப் பெருமான, இவ்விருபாலார்க்கும் ஏற்றியுரைத்து விளக்குவது போற்றற் குரியது.

'ஊனுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு'

என்றும்,

'நாணும் மறந்தேன் அவாமறக் கல்லாவென்
மாணு மடநெஞ்சிற் பட்டு'

என்றும், முறையே அருளுவது காண்க.

மணிமொழிப் பெருமானும் 'தாயிற் சிறந்தன்று நாண் தையலார்க்கு' எனவும், 'என்னொடும் வளர்ந்த பொற்பார் திருநாண்' எனவும், தலைவி கூற்றாகப் போற்றியுரைப்பர். இத்தகைய உயரிய பண்பை உலகுக்கே எடுத்துக்காட்டி வளர்ப்பது தமிழ்மாந்தர்தம் பெருங்கடமையாகும்.

—செல்லூர்க்கிழார்.

கலையா, கொலையா?

[பண்டிதர், திரு. சு. சிவப்பிரகாசம் பிள்ளை.]

கேட்பாரில்லையா? தமிழ் இலக்கிய நலம் அழியவிடுவதா? தமிழின் இலக்கண அழகு சிதையப் பார்ப்பதா?

சில ஆண்டுகட்கு முன்னா அறிஞர் டி. கே. சி. அவர்கள் தமது பதிப்பாக வெளியிட்ட கம்பராமாயணப் பதிப்பின் அவலங்கண்டு, தமிழ் மக்கள் பலா ஆங்காங்கே எதிர்ப்புத் தெரிவித்துச் செய்த கிளர்ச்சிகள் தமிழ்நாட்டில் மறைந்துபோக வில்லை. அவருக்கே அமைந்துள்ள 'தனித்திறம்' என்று தாமே மூதும் கட்டுரைகள்தோறும் அவர் காட்டிவரும் பால்க்காரி, பகல்காலம் போன்ற எண்ணற்ற பிழைகள் மலிந்த சொற்களைக் கொண்டு, அதுவும் கம்பராமாயணத்திலே தமது கைத்திறங் காட்டத்துணிந்த திருவாளா டி. கே. சி. அவர்கள் அந்நாளிலே அடங்கியிருந்தார். இன்று அவா மீண்டும் வெளிவந்து 'குறுமுனிவர்' ஆகும் அளவுக்கு அவரது சொற்பிழைகள் அவருக்கு விழாவணி செய்திருப்பது காணத் தமிழன் தலை குனியாதிருக்க முடியாது. இங்ஙனம் சொல்வது அவரது புலமைத்திறம் கண்டு, கொண்ட காழ்ப்பாலன்று, தமிழ்மொழியின் நிலைகுலைவு கண்டு தமிழர் நடுங்கித் துடிக்கும் அவலநிலையினாலேயேயாம்.

திரு டி. கே. சி. அவர்கள் கம்பராமாயணக் கவிநயங்கண்டு 'ரசி'க்கட்டும்; அவர் 'ரசிகமணி' ஆவதைக் குறைகூறுவோர் இல்லை. ஆனால், தமிழின் இனிய நடைவளங் கெடுக்கும் துறைகளிலே சென்று, தமிழுக்கே சிறப்பாயுள்ள இலக்கண வரம்பைக் கடக்கவேண்டாம், கெடுக்கவேண்டாம் என்பது ஒன்றே அவர்க்கும் அவருடைய 'ரசிகர்'க்கும் யாம் கூறும் அறிவுரையாகும்.

இன்று அவரது கம்பராமாயணப் பதிப்பு "இராசாசி" அவர்களால் அரங்கேற்றப்பட்டது என்ற ஒரு காரணத்தால், 'கல்கி'யாருக்கு உகந்தவர் டி. கே. சி. என்பதனால், தமிழ்த் தொண்டர் புத்தனேரி - சுப்பிரமணியமும், கொத்தமங்கலம் சுப்பு அவர்களும், சின்ன அண்ணாமலையாரும், ஏன்? கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களும் அறிஞர் டி. கே. சி. யின் தமிழ்க் கொலையை, இலக்கணச் செட்டின் குலைவை விரும்பித் துணைநிற்கும் குற்றவாளிகளேயோ? என்னும்படி "அரங்கேற்ற'

விழா"வை, அதன் வழியே, சொற்பிழை மல்கிய சிதம்பர நாதரின் பதிபபைப் பாராட்டியிருப்பது, இனித் தொல்காப்பியம், திருக்குறள் முதலிய இலக்கண இலக்கிய நூல்களையும் சிதைத்து அழிக்கவும புதுப்பிக்கவும் தொடங்கியதாகும் என்று கண்டு அஞ்சுகின்றோம்.

'இங்ஙனம் தமிழ் இலக்கியப் பண்பாடு அறியாத சிலாகூடிப் பெருவிழா எடுபபது, தமிழறிவுக்கு, தமிழ் இலக்கண வளர்ச் சிக்குக் குழிதோண்டிவரும் பல எதிர்பபுச் சக்திகளுக்கு ஆக்கந் தருவதாகிறது என்பதை மூடிவைக்க முடியாது.

கதைப்போக்கை வெறுப்பதனாலேயே 'காவிய நயமும வேண்டாம, தமிழா பண்பாடு பற்றியும கவலையிலலை, அறிவுரைத் திட்பமும வாழ்க்கைக் குறிககோளாகக் காட்டபபெறும் இனபத் திறனும் அழிந்துபோகட்டும்' என்று ஒரே மண்டையடியாகக் கமபராமாயணத்தைச் சாடியும் சுட்டெரிக்கவும் துணிநதுளள தமிழா் ஒரு சாரார்; தமிழாசிரியர்களில் 'இலக்கிய நயமும் இலக்கணச் சுவையும் சோறுபோடா' என்று கருதிவிட்டு, மாணவர்களுக்கு இந்நலனகளைக கறபிக்க வாய்ப்புப் பெறுதவர் ஒருசாரார்; 'நமக்கென்ன, புலவர் பெருமககள் பார்த்துக் கொள்வார்கள்' என்று ஒதுஙகிநிற்கும் பெருமக்களா ஒருசாராரா கப் பிரிந்து பிரிந்துபோனால், இனித் தமிழ்ச்செலவஙகளை யெல்லாம கரையான்கள் புற்றெடுத்து மூடிவிடவும் அவற்றி னூடே கருநாகங்கள் குடிபுகவும அன்றோ நேரும்?

"குற்றால முனிவர்" டி. கே சி யின் புலமைநயம் பாராட் டுந்திறம ஒருவாறாக, அவரது பதிப்புக் கருதித் தமிழ்ப்பெரும புலவாபெருமக்களாயுள்ள இராவ்சாகிபு கே கோதணட பாணி பிள்ளை B A., முதுபெரும புலவர், புலவரேறு. அ வரத நஞ்சையனார், டாக்டர் மு. வரதராசனார், இளவழகனார், வ. சு. செஙகல்வராய பிளளை M A., போன்ற தமிழ்ப் பேராசிரியர்கள் எல்லோரும இந்த நிலைமை குறித்து என்ன சொல்லுகிறார்கள், என்ன செய்கிறார்கள்? என்பதொன்றே எமது நெஞசத் துடிப்பாக இஃது எழுதலானேம். அறிஞர்கள் தமிழ்மொழி வளங்காக்கத் தக்கது விரைந்து செய்க! உடனடியாக ஓர் அறிக்கை வெளியிடுக! என்று மிகவும் பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறோம். வாழ்க நற்றமிழ்!

தமிழ்க் கலைச் சொற்கள்

[திரு. பெ பொ. சிவசேகரம், திருவள்ளுவர் கழகம், திருக்கோணமலை]

பலபடப் பரந்து கிடக்குங் கலைகளை மேனாட்டார் Arts என்றும் science என்றும இருபெரும் பிரிவுள அடக்கியுள்ளார்கள். அவர்கள் இலக்கியம் சரித்திரம் போன்றவைகளை Arts எனறும் கணிதம் வேதிநூல் போன்றவைகளை science என்றும் பாகுபடுத்தி வைத்துள்ளார்கள். இவ்வாறு கலவியை இருகூறு படுத்தி வழங்கும் வழக்கு தமிழ்மொழியிலும காணக்கிடக்கின்றது. மக்கள வாழக்கைககு இருகண் போனறு விளங்குபவை எண்ணும் எழுத்துமாகும. 'எண்ணும எழுததும் கண்ணெனத தகும' என்னும முதுமொழியைக் கொணடு இவ்வுண்மையை உணரலாம். கல்வி கேள்விகளில் தலைசிறந்த புலமையாளராய் விளங்கிய வள்ளுவர்,

> "எணணென்ப ஏனை எழுதென்ப இவ்விரணடும்
> கணணென்ப வாழும் உயிர்ககு."

என்று குறிப்பிட்டிருத்தல் இங்கு கவனிககத தக்கது. வள்ளுவர் கலையை இரண்டாக வகுததுக் காட்டுகின்றார். எண் என்றும் எழுதென்றும் வள்ளுவர் பாகுபடுததிக் காட்டும் நுட்பத்தை இன்றைய கலையுலகம் கண்டு மகிழும் என்பதில ஐயமில்லை. இன்று மேனாட்டினர் பகுத்துக் காட்டியுள்ள கலையின் பாகுபாட்டைப பலநூறு வருடஙகளுக்கு முன்னிருந்த வளளுவர் தம புலமைக் கண்கொண்டு வகுததுக் காட்டியிருப்பதைத தமிழுலகம் போற்றுதிராது. எண், எழுத்து என்னும இவ்விரண்டிலும் எணணிற்கு வள்ளுவர் முதலிடத்தைத் தந்துள்ளார். எண்ணிற்கு அடுத்தபடியே எழுத்தைக் குறிப்பிட்டுள்ளார். மேனாட்டுக் கலைப பாகுபாட்டினபடி வளளுவர் எண் என்று குறிபபிட்டது அறிவியற்கலையாகிய science என்பதும் எழுதென்று கூறியுள்ளது, arts என்று மேனாட்டாா கொண்டதையுமேயாகும. ஆனால், இனறு எண் என்பது கணிதத்தையும் எழுதென்பது இலக்கண இலக்கியங்களையும் மட்டும குறிப்பிடுவதாக வழக்காற்றில் எடுததாளப்பட்டு வருகின்றது. உண்மையில் எண் என்பது அறிவியற் கலைகளையும எழுதென்பது உணர்வியற் கலைகளையும் குறிபபிடுவதாகும.

science என்னும ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் இல்லாக் குறையை நீக்கக் கருதிய அறிஞர்கள் தொடக்கததில் 'விஞ்ஞானம' என்ற சொல்லினை குறிப்பிட்ட-

னர். 'விஞ்ஞானம்' என்பது வடமொழி யாதலினால் தனித் தமிழில் அதற்கு ஒருசொல் ஆக்குதல் வேண்டும் என்று முயன்று 'அறிவியல்' என்னும் சொல்லைப் பெற்றார்கள். இம் முயற்சியின் பயனாக இன்று science என்னும் ஆங்கிலச் சொல் லைக் குறிப்பதற்கு இருசொற்கள் கிடைத்துள்ளன. இவ்விரு சொற்களோடு ஏற்கனவே தமிழில் வழங்கி வந்துள்ள 'எண்' என்னும் சொல்லும் உள்ளது. வடமொழி வழி வந்த 'விஞ்ஞான மும்,' தனித்தமிழாளர் ஆக்கித்தந்த 'அறிவியலும்', வள்ளுவர் குறளில் வகுத்துக் காட்டிய 'எண்ணும்' என science என்னும் ஆங்கிலச் சொல்லைக் குறித்துக் காட்டும் சொற்கள் மூன்று தமிழ்மொழியில் பயின்று வருகின்றன. கலைச் சொல்லாக்க முயற்சியிலே ஈடுபட்டுழைக்கும் அறிஞர்களால் ஆங்கிலத்தில் ஒருசொல் வழங்கிவரும் பதங்களுக்குத் தமிழில் இரண்டு மூன்று சொற்கள் ஆக்கப்பட்டு வருகின்றன. வளர்ந்து வரும் நிலையிலுள்ள எம்மொழிக்கும் இவ்வாறு சொற்கள் பல அமை வது தவிர்க்க முடியாத தொன்றாகும்.

அறிவியற்கலைச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்கள் இல்லையே என்று இடர்ப்பட்டிருந்த நிலை நீங்கி இன்று ஒரு சொல்லுக்குப் பல சொற்கள் உள்ளனவே என்று எண்ணக் கூடிய நிலை வந்துவிட்டது. ஒரு சொல்லுக்குப் பல பொருளும் பல பொருளுக்கு ஒரு சொல்லும் தமிழ்மொழியில் மட்டுமன்றி ஏனைய பிறமொழிகளிலும் உள்ளன. இவ்வாறு ஏற்படுவது மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிபுரிவதாகும்.

பிறநாட்டிலிருந்து நம் நாட்டிற்குத் தருவிக்கப்படும் பொருள்களை அப்படியே அம்மொழிச் சொற்களால் அழைப் பதும், அதனைத் தமிழ்ஒலி முறைக்கு முரண்படாமல் திரித்துத் தமிழோசை கொடுத்து வழங்குவதும், வடமொழியினுதவி கொண்டு ஆக்கி வழங்குவதும், தனித்தமிழில் மொழிபெயர்த்துப் பயன்படுத்துவதும் ஆகிய பலமுறைகள் காணப்படுகின்றன. உதாரணமாக Bicycle என்னுஞ் சொல்லைக் கவனித்துப் பாருங்கள். அதனை 'பைசிக்கிள்' என்று அப்படியே உபயோ கிப்போர் பலர். அப்படிக் கூறியவுடன் அது இலகுவில் விளங்கி விடுகின்றது. கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளை என்பார் தமது குழந்தைக் கவியில் இச்சொல்லை சைக்கிள் வண்டி என்று வழங்கியுள்ளார்.

“தங்கையே, பார்! தங்கையே பார்!
சைக்கிள் வண்டி இதுவே பார்!
…………………… ………

"......... ....
ஒன்றனபின் ஒன்றாக
உருளும்பை தாககளைப் பாா!
...."

இச்சொல்லை மொழிபெயர்க்கப் புகுந்தவர் வடமொழியில் சொற்றேடித் தமிழில் புகுத்தினர். துவிசக்கர வண்டி என்பது அது. ஐயோ! இதென்ன, தமிழ் மொழிபெயர்ப்புக்குப் பதிலாகச் சமஸ்கிருத மொழிபெயர்ப்பாயிற்றே என்று கருதிய தமிழ் அறிஞர்கள் அதனை 'ஒறறைச்சுவட்டு வண்டி' என மொழிபெயர்த்தனர். இன்னொரு சாரார் 'மிதி வண்டி' என்று பெயரிட்டனர். இம் மொழிபெயர்ப்புகளில் சிறந்த கருத்தமைதி காணப்படுகின்றது. ஆனால், இதெல்லாம் எற்றுக்கு! இதனை அப்படியே மொழிபெயர்த்துவிடுவோம் என்று சிலர் இரு சில்லு வண்டி எனப் பெயர்த்தெழுதினர். மற்றுஞ் சிலர் இப்பெயர் சிறிது நீண்டுவிட்டது, இதனைக் குறைக்க வழியில்லையா என்று பார்த்தார்கள். அக் குறைக்கும் முயற்சியால் 'இருசில வண்டி' 'இருசிலவி'யாயவிட்டது. பிறநாட்டுப் பொருள்களையும், அறிவியற்கலைச் சொற்களையும் தமிழாக்கப் புகுந்த முயற்சியில் ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்களும், ஒரு சொல்லைக் குறிக்கப் பல சொற்களுமாகக் கலைச்சொற்கள் இன்று விரிந்துகொண்டுபோவதை நாம் காணலாம்.

தமிழர்களோடு வடமொழியாளர் கலப்புற்ற காலத்திலே பல வடசொற்கள் தமிழில் வந்து சேர்ந்துவிட்டன. அச் சொற்களைப் புலவர்களும் மற்றவர்களும் பன்னெடுநாட்களாக வழங்கி வந்ததன் காரணமாக அச் சொற்கள் தமிழ்மொழியில் நிலைத்து விட்டன. புராண இதிகாசம் போன்ற தமிழ் இலக்கியங்களிலும் சமய நூல்களிலும் பல வடசொற்கள் இடம்பெற்று விட்டன. அப்படி நிலைபெற்றுள்ள வடசொற்களிற் பல திரிந்து தமிழோசை பெற்று வடமொழிச் சொற்கள் என்று அவைகளைப் பார்த்த மாத்திரத்தே கூறிவிட முடியாதபடி இன்று காணப்படுகின்றன. இஃது அன்று நடந்த வடமொழிக் கலப்பு. இன்று மேனாட்டுக் கலைகளை மொழிபெயர்க்கப் புகுவோர் வடமொழிச் சொற்களால் பிறமொழிச்சொற்களைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதி வருகின்றனர். இம் முறை தவறானது என்று கருதித் தனித்தமிழ் அறிஞர் பிறமொழிச் சொற்களுக்கு வடமொழியில் சொற்கள் தேடுவதை விடுத்துத் தமிழிலேயே சொற்களை ஆக்கித் தருகின்றனர். பிறமொழிச் சொற்களை, மக்கள் வழங்கி ஆட்சிப் படுத்தி விட்டனரே என்ற காரணத்தால்,- விளங்குவதற்கு எளிதாய் இருக்கும் என்று கருதி,-

அவற்றை அப்படியே வழங்கி வருகின்றனர் சிலர். இம் முறையினால் பிறமொழிச்சொற்கள் தமிழொலி வரம்பைமீறித் தமிழில் வழங்கி வருகின்றன. அந்தப் பிறமொழிச் சொற்களுக்குப் பதிலாகத் தனித்தமிழ்ச் சொற்களைப் பெய்து உரைப்பினும் அவை முன்னமே ஆட்சியில் இருக்கும் பிறமொழிச் சொற்களோடு போட்டியிட முடியாது வழக்கிழந்து வருகின்றன. இது மட்டுமன்றி பிறமொழிச் சொற்களின் பயிற்சி நிலைத்த நிறுமிடத்து ஓர் புதிய தனித்தமிழ்ச் சொல்லையோ அல்லது வடமொழிச் சொல்லையோ வழங்கும்பொழுது அதனை நகைப்புக்கும் பழிப்புக்கும் இடமாக்கியும் வருகின்றனர். இத்தகைய இடர்ப்பாடுகளை மேற்கொண்டு தனித்தமிழ்ச் சொற்களை வழக்கிற்குக் கொண்டுவர வேண்டியதாக உள்ளது. கலைச்சொற்களைப் பிறமொழிச் சொற்களாலோ அல்லது வடமொழிச் சொற்களாலோ வழங்குவதை விடுத்து அச் சொற்களுக்குரிய உயர்ந்த தமிழ்ச் சொல்லால் வழங்குவதே பொருத்தமானதாகும். தமிழில் கலைச் சொற்கள் ஆக்குவதோடு மட்டும் நின்றுவிடாமல் அச் சொற்களைத் தமிழ்மக்கள் யாவரும் வழக்கிற்குக் கொண்டுவரச் செய்தலும் வேண்டும். அறிஞர்கள் அரிதில் முயன்று ஆக்கிய கலைச் சொற்களை வழக்கிலே கொண்டுவருவதில் பல இடர்ப்பாடுகள் நேருதல் கூடும். அவைகளைப் பொருட்படுத்தாமல் முயன்று வந்தால் அவை நிலைத்துவிடும். அறிஞர்களின் ஆக்கமுயற்சியோடு அரசினர், வணிகர், விளம்பரஞ் செய்வோர், செய்தித்தாள் வெளியிடுவோர், பொதுமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்புஞ் சேர்ந்து செயலாற்றின் தமிழ்க்கலைச் சொற்கள் தமிழ் மக்களின் வழக்கில் நிலைபெற்று விடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பிறநாட்டிலிருந்து தமிழ்நாட்டில் இறக்குமதியாகும் புதிய பொருட்களுக்கு இறக்குமதியாகும் பொழுதே அவ்வப் பொருட்களுக்குரிய தமிழ்ப் பெயர்களோடு இறக்குமதி செய்ய அரசினர் ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். வணிகர்களும் விளம்பரஞ் செய்வோரும் செய்தித்தாள் வெளியிடுவோரும் அப்பொருட்களை விளம்பரஞ் செய்யும்பொழுது அப்பொருட்களுக்குரிய தமிழ்ப் பெயரினாலேயே விளம்பரஞ் செய்தல் வேண்டும். இம் முறையினால் பிறமொழிச் சொற்கள் தமிழ்மொழியில் கலவா வண்ணம் காத்துக் கொள்ளலாம். அறிவியல் நூல்கள் ஆக்குவோம், அறிவியற்கலையைத் தமிழில் கற்பிக்கும் ஆசிரியரும் தமிழ்க் கலைச்சொற்களை வழக்கில் கொண்டுவரும் முயற்சியில் கண்ணுங் கருத்துமாய் இருந்து உறுதுணை அளித்தவரின் சிறிது காலத்துள் தமிழ் நாடெங்கணும் உயரிய செந்தமிழ்ச் சொற்கள் வழக்காற்றில் நிலைபெற்று விடுதல் திண்ணம்.

அறிஞர்கள் ஆங்காங்கு ஆக்கியமைத்துச் சென்ற கலைச் சொற்களை அகரவரிசைப படுத்தி, ஒரு பொருள் குறிக்கும் பல சொற்களையும் எடுத்துக் காட்டிக் கலைச்சொற்களுக்குப் பண்டைய நிகண்டுபோல் ஓர் சிறந்த தொகுப்பகராதி வெளியிடுதல், தமிழில அறிவியற்கலை வளர்ச்சியில் அறிஞர் செய்யக்கூடிய பெருந்தொண்டாகும்.

அரசினரால் நடத்தப்படுந் தேர்வுகளில் அறிவியற்கலைப் பாடங்களில் தனித்தமிழ்ச சொற்களுக்கு முதலிடம அளித்து வருதலும் தமிழ்க கலைச்சொற்கள் வழக்காற்றில் நிலை பெறுவதற்குப் பேருதவி அளிக்கும். இதுவரையில பிற மொழிச சொற்களையும் வடமொழிச் சொற்களையும் கையாண்டு அறிவியல் நூல்களை ஆக்கித்தந்த அறிஞர்கள், இனிவரும பதிப்புக்களில் பிறமொழிச் சொற்களையும், வடமொழிச சொற்களையும் நீக்கி அவைகளுக்குரிய தமிழ்ச்சொற்களைப் பெய்தும், நூலின் இறுதியில ஓர் கலைச்சொல் நிரலை ஆக்கித் தமிழ்ச்சொற்களுக்குரிய பிறமொழிச்சொல, வடமொழிச்சொல் ஆகியவற்றை எடுத்துக்காட்டியும் நூலகளை வெளியிடுவாராயின் கலைச்சொல் வடிவில் தமிழில் புகுந்து இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களை அறவே நீக்கிவிடவும், உரிய தனித் தமிழ்ச்சொற்களை உரிய இடங்களிற் பயன் படுத்தவும் பெரிதும் துணை செய்தவராவார்

அறிவியறகலையை மாணவர்களுக்குப புகட்டுவதற்குப் பொருத்தமான கலைநூல்கள் தமிழ்மொழியில் படி முறையாக அமைக்கப்படாதிருப்பது அறிவியற்கலை வளர்சசிக்குப் பெரிதும் தடையாய் அமைந்துள்ளது கலையாக்கங் கருதியுழைக்கும் தமிழ் அறிஞர்கள் இத்தடையை மேற்கொள்வதற்குப் படிமுறையாகத தனித்தமிழில் சிறந்த அறிவியற்கலைநூல்களை ஆககித் தருதல வேண்டும் இன்று இலங்கை அரசினர் அறிவியற்கலைகளை ஏழாம வகுப்பு வரை தமிழிலும் சிங்களத்திலும் கற்பித்தல் வேண்டும் என அறிக்கை விடுத்துள்ளனர். அடுத்த அடுத்த ஆண்டுகளில் உயர்தர வகுப்புகளிலும் அறிவியற்கலைகளை நாட்டு மொழிகளில் கற்பிப்பதற்கு இலங்கை அரசினர் முயற்சி செய்து வருவது பாராட்டற்குரிய தொன்றாகும. இந்நிலையில் படிமுறையாக அமைக்கப் பெற்றுள்ள கலைநூல்களின் இன்றியமையாமையை உணர்ந்து அதற்கு ஆவன செய்தல் தமிழ்க்கலை வளர்ச்சிக்குப் பேருதவி அளிக்குந் தொண்டாகும்.

தமிழ்க் கலை வாழ்க! தமிழ் மொழி வாழ்க!!

பண்டிதமணியின் சொல்லின்பம்

[வித்துவான் செ. வேங்கடராமச் செட்டியார்,
துணைத் தமிழ்ப்பேராசிரியர், S. V. O கல்லூரி, திருப்பதி.]

நேரிசை யொத்தாழிசைக்கலி

அன்புருவா மரன்றருளில் அழுந்துமனங் கசிந்துருகி
முன்புதிரு வாசகத்தை மொழிந்தமணி வாசகனார்
என்புருக்குந் தமதுமொழிக் கேற்றபொரு ளறியாமல்
துன்புறுமிவ் வுலகிலை தோன்றவறிந் ததுவிளக்கப்
பின்புகதி ரேசனெனும் பெயரினராய்ப் பிறந்தாரென்
றுன்னுதற்காம் பெருமையுடை யுயர்பெரும்பே ராசானை
இன்பறிவு பயனுறச்சொல் எழிலார்பண் டிதமணியை
நன்னெஞ்சே! யறிதியவர் நயவுரையுங் கேட்டறிவாய்;

ஊனொன்ற உண்ணுபொழு துறுசுவையைத் தருமியல்பின்
தேனென்றால் பாலென்றால் செல்லுமவர் சொல்லுவமை
ஊனொன்று முயிரொன்றி யுள்ளுதொறு மினிகருமியல்
தேனின்கண் பாலின்கண் திருத்தமுற வியைந்தக்கால்;

கைம்மாறு கருதாது கரையிலுல குயிர்வாழப்
பெய்ம்மழைதா னென்னிலோ பெறுமவாசொற் பொழிவுவமை
பெய்யவிழை வார்க்கக்கால் பெயுமியல்பை யுடையதுவாய்
மெய்யறிவை விளைவிக்கு மேன்மைமழைக் கெய்தியக்கால்;

உண்பார்தம் பிணிமூப்பை யொழிக்குமியல் புடையதுவாம்
விண்ணவர்த மின்னமிழ்தம் மேவுமவா மொழிக்குவமை
உண்ணுவார்க் கெளிமையதாய் உலகுடைய சிவன்றருளில்
நண்ணுவிக்கும் பெருமையையந் நல்லமிழ்தம் நண்ணியக்கால்;

அதனால்,

தேனும் பாலும் மழையு மமிழ்தும்
மானு முவமையோ வல்லவச் சொல்வலோர்
விசய ஐப்பசி விளங்குகார்த் திகைநாள்
இசைந்தனர் இறையடி யெனுமொழி கேட்டும்
மாழ்கிலை மடிகிலை யிருந்திவ்
வாழ்வில் மயங்கினை வலியையால் நீயே.

செய்திகளும், குறிப்புக்களும்

நெல்லையில் தமிழ்த்திருநாள்

தருமையருள்பெறு நெல்லை அருணகிரி இசைக்கழகத்தின் எட்டாவது தமிழ்த்திருநாள் அணிசெயப்பெற்ற கழக முத்தமிழரங்கத்தில் 23-1-54 சனி மாலை 6 மணிக்குத் தொடங்கியது. இசைவாணர் திரு. குற்றாலலிங்கம் பிள்ளையவர்களின் இறைவணக்கம் தமிழ்த்தாய் வணக்கப் பாடல்களுடன் நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று. கழகத் தலைவர் எஸ். எஸ். பிள்ளையவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். பின்னர் இலஞ்சிச் செல்வர் I. A. சிதம்பரம் பிள்ளையவர்கள் விழாவைத் தொடங்கிவைத்துச் சொற்பொழிவாற்றினார்கள். அவர்கள் தமது தொடக்கவுரையில் தற்காலத் தமிழகத்தில் தமிழார்வம் பெருகியிருப்பது பாராட்டத்தக்கதென்றும் அது சமயத்திற்குப் புறம்பாக வரம்புகடந்து செல்வதைத் தடுக்கவேண்டுவது இன்றியமையாததென்றும் பண்டுதொட்டுச் சமயமும் தமிழும் கலந்தே வளர்ந்துவந்தனவென்றும் அத்தகைய சமய உணர்ச்சியுடன் கூடிய தமிழ்ப்பற்றே நாட்டிற்கு நலம் பயக்கும் என்றும் வலியுறுத்திப் பேசினார்கள்.

விழாவின் முதல்நாள் வள்ளுவர் விழாவாதலின், விழாவினை வாழ்த்தவும், வள்ளுவர் விழாச் சொற்பொழிவுகள் அடங்கிய 'வழிகாட்டும் வள்ளுவர்' என்ற, அருணகிரி இசைக் கழக வெளியீட்டு நூலை அரங்கேற்றி வெளியிடவும் விருதை வள்ளுவவேள் ச. வெள்ளைச்சாமி நாடார் அவர்கள் வந்திருந்தனர். அவர்கள் திருவள்ளுவரின் தெய்வப் புலமையையும் திருக்குறட் சிறப்பையும் பற்றிப் பல நூல் சான்றுகளுடன் எளிய நடையில் தெளிவுறப் பேசி 'வழிகாட்டும் வள்ளுவர்' என்ற நூலை வெளியிட்டருளினர். அன்றைய வள்ளுவர் விழாச் செலவிற்கென்றும் நூல் வெளியீட்டிற்கென்றும் தனித்தனி நூறு வெண்பொற்காசுகள் அன்பொடு வழங்கியருளினார்கள். அவ்வள்ளலுடைய திருக்குறட் பற்றைக்கண்ட நெல்லை நன்மக்கள் பல்லோரும் மனமாரப் பாராட்டினார்கள். பின்னர் வள்ளுவர்—அறநெறியாளர், அரசியலறிஞர், பொருளியற் புலவர், பெருந்தகையாளர், மெய்ப்பறிஞர், கவிஞர் என்ற ஆறு தலைப்புகளில் முறையே திருவாளர்கள் ச. கணபதி முதலியார், அ. சு. நாராயணசாமி நாயுடு, சிவ. இராமச்சந்திரன், ஆ. அருளப்பன், ந. சேதுரகுநாதன், ஆ. செபரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அ. இ. கழகத்தார் குறளிசை நிகழ்த்தினர். கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள், 'வழிகாட்டும் வள்ளுவர்' என்னும் நூலைத் தருமையாதீன மகாசந்நிதானம் அவர்களின் மலரடிகட்குக் காணிக்கையாகச் சேர்ப்பித்து, மகாசந்நிதானத்தின் கருணையை வியந்து போற்றினார்கள். இறுதியில் புலவர் அரசு எழுதிய 'கவரிமான்' என்ற சிறு நாடகம் கழகத்தாரால் நடிக்கப்பெற்றது. இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் தலையங்கத்தில் காண்க.

மூன்றாம் நாள்—சமய விழா

25-1-54 திங்கள் மாலை 6 மணிக்குச் சமயவிழா நிகழ்ச்சிகள் தொடங்கின. இசைவாணர் குற்றாலலிங்கம் பிள்ளையவர்கள் இறைவணக்கம் தமிழ்த்தாய் வணக்கப் பாடல்கள் பாடினர். டாக்டர் அண்ணாமலைப் பிள்ளையவர்கள், அண்மையில் மறைந்த தூத்துக்குடி, சைவசித்தாந்தப் பேராசிரியர் சிவகுருநாத பிள்ளையவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்து, அவர்களது சித்தாந்தப் பெரும்புலமையைப் பாராட்டிப் பேசினர். நம் சைவ சமயாசாரியராகிய நாவுக்கரசர் பெருமானைப்போல்

எண்பத்தொரு ஆண்டுகள் வாழ்ந்து சைவப்பணியாற்றியவர்கள் சிவகுருநாத பிள்ளையவர்கள். மாணவர்கட்குச் சித்தாந்த நுண்கருத்துக்களை எண்மையாகப் புகட்டும் திண்மையான பேரறிவாளர் அவர்கள். தமிழகத்தில் சைவசித்தாந்த வல்லார் என்றால் அவர்கள் ஒருவரையே குறிக்கலாம். அவர்கள் என் குருநாதனுமாவர். அன்னாரது மறைவு தமிழகத்திற்கும் சிறப்பாகச் சைவ சமயத்திற்கும் பேரிழப்பு என்று கூறினர்.

இச்சமய விழா, நெல்லை அப்பரடிகள் அருட்பணிக் கழகச் சார்பில் நடைபெற்றது. அக்கழகத் தலைவரும், சங்கர கணபதிப் பஞ்சாலைகளின் அதிபருமாகிய ச. அருணாசலம் பிள்ளையவர்கள் விழாவுக்கு முதலில் வாழ்த்துரை வழங்கினார்கள். தற்காலத் தமிழகத்தில இளைஞர்களிடையே சமயவுணர்ச்சி குன்றி நாத்திகம் வளர்ந்துவரும் இந்த நாளில் இதுபோன்ற விழாக்களும் சமயப் பேரறிஞர்களின் பேருரைகளும் இளைஞர்க்கு நல்லறிவூட்டும் என்று நம்புகிறேன். இத்தகைய சமய விழாவினைத் தமிழகத் திருநாளில் அமைத்த அருணகிரி இசைக்கழகத்தாரைப் பாராட்டுகிறேன். 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்றருளிச் செய்த நாவுக்கரசர் பெருமானுடைய குறிக்கோளை எல்லோரும் உள்ளத்திற்கொண்டு சமயப்பணி செய்தல்வேண்டும். இன்றேல் உலகத் துன்பங்கள் ஒழியா என்று கூறினார்.

பின்னர்க், காசிவாசி ஈசான சிவாச்சாரிய சுவாமிகள் சைவசமயத்தில் ஆகம நூல்கள், தோத்திர நூல்கள் என்னும் இரு பொருள்களையும் பற்றி ஒருமணி நேரம் அரியதொரு விரிவுரை வழங்கினார்கள். உயிர்கட்குப் பயன்தர வந்த நூல்களே ஆகம நூல்கள் என்றும் அவை பதி பசு பாசம் என்னும் முப்பொருளுண்மையைப் பேசுவன என்றும், அவற்றை ஆன்மாக்களின் தகுதிக்கேற்ப இறைவன் அவ்வவ்வெல்லையில் வந்து அறிவிப்பார் என்றும் கூறினார். தோத்திர நூல்கள் என்பன சமய குரவர்கள் நால்வரும் இறைவனைத் தோத்தரித்துப்பாடிய தேவார திருவாசகங்கள் என்றும், அவற்றை உண்மையாகவே ஓதியுணர்பவர்க்கு உறுபயன் விளைவது உறுதியென்றும், அத்தோத்திரங்களின் துணைகொண்டுதான் இறையருள் பெறுதற்கு முயலவேண்டும் என்றும் கூறினர்.

'மெய்கண்ட நூல்கள்' என்னும் பொருள்பற்றிச் சித்தாந்த பூஷணம் வே. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள் பேசினார்கள். பண்டார நூல்கள் என்ற தலைப்பில் 'சிவபோக சாரம்' என்னும் நூலைப்பற்றித் தருமையாதீனம் சிவத்திரு மாணிக்கவாசகத் தம்பிரான் அவர்களும், 'முத்தி நிச்சயம்' என்னும் நூலைப்பற்றி ச. தண்டபாணி தேசிகர் அவர்களும் சொற்பொழிவாற்றினர். இடையே காருகுறிச்சி அடுக்குமொழி பி. ஆவுடையப்பன் செட்டியாரவர்கள் 'அடுக்குமொழியின்பம்' என்னும் தலைப்பில் அடுக்குமொழிகளைப் பேசிக் கூட்டத்தை மகிழ்வித்தனர். இறுதியில் தருமையாதீனத்தை நிறுவிய குருஞானசம்பந்தரைப் பற்றித் தண்டபாணி தேசிகர் அவர்கள் பேசினர். அதன் பின்னர் 'வீட்டில் சமயவுணர்ச்சி' என்ற தலைப்பில் காசிவாசி ஈசானசிவாச்சாரியார் அவர்கள் சை. சி. கழக வெளியீடாகிய 'திருவிளக்கு வழிபாடு' என்னும் நூலைப் பற்றிப் பாராட்டிப் பேசினர். கு. அருணாசலக் கவுண்டர் அவர்களின் நன்றியுரைக்குப்பின், அருணகிரி இசைக்கழகத்தாரால் அ. க. நவநீத கிருஷ்ணன் அவர்கள் எழுதிய 'திலகவதியார்' என்னும் நாடகம் நடித்துக்காட்டப்பெற்றது.

நான்காம் நாள்—புலவர் விழா

26-1-54 செவ்வாய் மாலை 6 மணிக்குப் புலவர் விழாத் தொடங்கியது. இசைவாணர் குற்றாலலிங்கம் பிள்ளையவர்கள் இறைவணக்கம் தமிழ்த் தாய் வணக்கப் பாடல்கள் பாடினார். மறை. திருநாவுக்கரசு அவர்கள், பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்கள் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்துப் பண்டிதமணியவர்களின் இருமொழிப் புலமையையும் பாராட்டிப் பேசினர். பின்பு, புலவர் இளங்கண்ணனார் அவர்கள், கவியரசு-வேங்கடாசலம் பிள்ளையவர்கள் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்துக் கவியரசின் புலமையைப் பாராட்டிப் பேசினார். பின் நெல்லை அரசினர் ஆசிரியப் பயிற்சிப்பள்ளித் தலைவர் இர. பாலகிருட்டிண முதலியார் B.A., L.T., அவர்கள் விழாவிற்கு வாழ்த்துரை வழங்கினார்கள். தமது வாழ்த்துரையில் சங்க இலக்கிய மாணவியினையும் வள்ளுவர் பெரு மையையும் குறித்துப் பேசினார். பின்னர்ப் புலவர் பெருமக்களில் தொண்டைநாட்டுச் சேக்கிழார் பற்றி மறை திருநாவுக்கரசு அவர்களும், சோழநாட்டுக் கம்பர் பற்றி சோ. பாகீரதியம்மையாரவர்களும், பாண்டி நாட்டு வடமலையப்பரைப்பற்றி ச. சகந்நாதன் அவர்களும், உமறுப்புல வரைப்பற்றி அப்துர் ரகுமான் B. A., B. L., அவர்களும், சேரநாட்டு இளங்கோப்பற்றி அ. க. நவநீதகிருட்டிணன் அவர்களும், கொங்குநாட்டுக் கொங்குவேளிரைப் பற்றி செ. சுப்பையா பிள்ளை M. A. அவர்களும் பேசினர். கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள் நன்றியுரை கூறினர். தி. அ. சொக்கலிங்கம் B. A. Hons. அவர்களால் எழுதப்பெற்ற 'மாணவி' என்ற சிறு நாடகமும், 'அருள் உள்ளம்' என்ற சிறு நாடகமும் அ. இ. கழகத்தாரால் நடித்துக் காட்டப்பெற்றன.

ஐந்தாம் நாள்—விஞ்ஞான விழா

27-1-54 புதன் மாலை 6 மணிக்கு இறை வணக்கம் தமிழ்த்தாய் வணக் கத்துடன் விழாத் தொடங்கியது. நெல்லை மாவட்டக் கல்வித்துறைத் தலைவர் வேத. அ. மரியசூசையவர்கள் M.A., L.T., விழாவுக்கு வாழ்த்துரை வழங்கி அன்றைய சொற்பொழிவு நூலாகிய 'இந்திய விஞ்ஞானிகள்' என்ற நூலை அரங்கேற்றி வெளியிட்டார்கள்.

இவ்விஞ்ஞான விழா, சென்னை அலைடு பதிப்பகச் சார்பில் நடை பெற்றது. இந்திய விஞ்ஞானிகளில் ஐவரைப்பற்றிய ஐந்து பேராசிரியர் களின் பேருரைகளை அப்பதிப்பகத்தார் நூலாக அச்சிட்டுள்ளனர்.

ஆறும் நாள்—திருவாசக விழா

28-1-54 வியாழன் மாலை 6 மணிக்குத் திருவாசக விழா தொடங் கியது. இசைவாணர் குற்றாலலிங்கம் பிள்ளையவர்களின் இறை, தமிழ்த் தாய் வணக்கப் பாடல்கட்குப்பின், தென்காசி நீதிபதி B. S. சோமசுந்தரம் பிள்ளை B.A., B.L., அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். திருவாசகத்தில் எழுச்சி, பாவை, பணிலை, பத்து, அகவல் என்னும் ஐந்து பொருள்களைப் பற்றி ஐந்து சொற்பொழிவுகள் நடைபெற்றன. இரவு 9-30 மணிக்குக் காருகுறிச்சி நாதசுர இசைச்செல்வர் ப. அருணாசலம் அவர்களின் இனிய நாதசுர இசையரங்கு நடைபெற்றது.

இத் தமிழ்த் திருநாள் தொடர்பில் 7-2-54 ஞாயிறு இரவு 9 மணிக்குக் கழக அரங்கத்தில் 'புகழேந்தி' என்னும் இலக்கிய நாடகம் அ. இ. கழகத்தாரால் நடித்துக் காட்டப்பெற்றது.

திரு. மகா மகாமாரியம்மன் கோவில்

சமயப்பிரசார சபை. 177, ஹைஸ்திரீட் கோலாலம்பூர்.

இச் சபையினர் செய்துபோதரும அரும்பெரும் பணிகள் போற்றற்குரியன. நாடும் மொழியும் நனெறியும் ஈடும எடுப்பும இல்லாப் பீடுற்றுவிளங்கப் பெருந்துணைபுரிவன பொதுமைய. 1953 நவம்பர் வெளியீடு. வரப்பெற்றேம். அதனை வாயிலாகக் சபையினர் ஆற்றிவரும திருமுறை ஓதலும, சிவநெறி பேணலும, மெய்யடியார்களின் திருவரலாற்றுடன திருநாட் கொண்டாட்டங்களும பலவாம தற்காலத்துப் பெரியார்களின கொண்டாட்டச சிறப்புக்களும் பல. நலலிசைப் புலமையும், நலலொழுக்கமும, தெய்வ நாட்டமும வாய்ந்த பெரியார்களைப் பெருமுயற்சியும் பெரும்பொருட்பிணையும செலவும ஒரு சிறிதும் நோக்காது பேரார்வமுடன அவ்வப்பொழுது வரவழைத்துச் செந்தமிழ் மாண்பும சிவநெறிச சிறப்பும் கடல்கடந்த வெளிநாட்டினகணணும பரப்பிவரும பான்மை மிகவும் போற்றற்குரியது.

மாணவ மாணவியர்க்கு ஊக்கமும் ஆக்கமும ஒருங்கு உணர்தரும் முறையில சொற்போட்டிகளும பரிசுகளும நிகழ்வன காணப் பெரிதும் மகிழ்கின்றேம. திருக்கோவில் வழிபாடு, கூட்டுவழிபாடு, கூட்டு வேண்டுகோள் (பிரார்த்தனை) அதற்கு வாயிலாகச 'சிவபுராண' மலிந்த விலை வெளியீடு முதலிய தொண்டுகள உலகத்துக்கு எடுத்துக்காட்டாவன பெரியோர் பயிலும சிறந்த வகுப்புக்களாக 'திருக்குறள் வகுப்பு' 'சிவ ஞானசித்தியார் வகுப்பு' 'திருமந்திர வகுப்பு' முதலியன. இத்துணை பேரன்பு தாயகத்தாரும செய்வராயின நாடும மொழியும நனெறியும மிகுவிரைவில் பண்டைய நிலைமையினும மிகுப் புதுமைமிளிர எல்லாத் துறைகளிலும முன்னேறும எனபதற்கு ஐயமில்லை. இச்சபை நீடுவாழ்ந்து பீடுபல பெறறுப பிறங்குமாறு பெருமபொருளை வழுத்துகின்றேம.

திருவள்ளுவர் திருநாள் 18-5-1954

இத்திருநாளை வழக்கம்போல் இவ்வாண்டிலும் கொண்டாட வேண்டுமென்று கொழும்பு தமிழ்மறைக் கழகத் தலைவர் பேராசிரியர் கா. பொ. இரத்தினம எம் ஏ., பி ஓ. எல. அன்புடன் அறிவிக்கின்றார்கள். செய்யவேண்டிய முறைமைகளைச் சென்ற ஆண்டுச் செல்வியில் விளக்கமாகக் காணலாம. புதிதாகச் செய்யவேண்டிய சிறந்த ஆக்கப்பணி:

"திருக்குறளைப் பிறநாட்டு மக்களும் நன்கு படித்துப் பயனடையச் செய்தற்காக அதனை உலகத்திலுள்ள சிறந்த மொழிகள் பலவற்றிலும் செவ்வையாக மொழிபெயர்த்து வெளியிடுதல் வேண்டும்."

தெரிந்த அளவில் இப்பொழுதுள்ள மொழி பெயர்ப்புக்கள்

க. ஆங்கிலம்: ஜி. யு. போப், எம். எஸ். பூரணலிங்கம்பிள்ளை, வ. வே. சு. ஐயர், டபிள்யு எச. டிரூஉம—ஜே. லாசரஸ்—ம, வி. ஆர். ராமச்சந்திர தீச்சதர், ஆ அரங்கநாத முதலியார்.

சிற்சில பகுதிகளை மொழிபெயர்த்தோரும் பலராவர். அவர்களுள்ளே பின்வருவோர் குறிப்பிடத்தக்கவர்கள்:

ச. இராசகோபாலாச்சாரியார், எவ். டபிள்யு. எல்லீஸ், ஈ. ஜே. ராபின் சன், திருநாவுக்கரசு அம்மையார், சி. ஈ. கவர், சபாரத்தின முதலியார், எச். ஏ. பொ.

௨. இலத்தீன்: சி ஜெ. பெஸ்கி (வீரமாமுனிவர்) [இருபால்கள் மாத்திரம்]. டாக்டர் கிரௌல் (ஒரு பகுதி)

௩. ஜெர்மன் ஏ. எப் காமெராஸ், டாக்டர் கிரௌல் (ஒருபகுதி); பிரடரிக் ரூக்காட் (சில அதிகாரங்கள்).

௪. பிரஞ்சு எம். லெம்ரேஸ, எம். ஏரியல், பி. ஜி டி. டுமாஸ், லூயி, ஜே கோலியோ (சிலபகுதிகள்), ஜி. பாரிகோ பாண்டெஞே (காமத்துப்பால்).

௫. சமக்கிருதம்: (அறத்துப்பால—நீதிகுசும்மாலா) அப்பாதீசசிதா.

௬. இந்தி: க்ஷேமானந்த ராஹத், பி டி. ஜெயின்.

௭. மலையாளம்: திவான் பகதூர் கோவிந்தபிள்ளை.

௮. தெலுங்கு. கனுப்பர்த்தி வேங்கடராம ஸ்ரீ வைத்தியநாதா.

௯ மராட்டி: சாநேகுருஜி.

௧௦ வங்காளம் ....

மதிப்புரை

இறைவனின் உறைவிடங்கள்

[ஆசிரியரும், பதிப்பாளரும் திரு. காளத்தி, நடேச முதலியார் அவர்கள்; கிடைக்குமிடம் 107, துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5; விலை, ரூ 2-1-0.]

இந்நூல் திருநெறியாகிய சிவநெறிச் செல்வர்களுக்குச், சித்தாந்த சைவர்கட்கு அருட்பேறனைய பெருநூலாகும் ஏனையார்கட்குத் தமிழகத் தொன்மைக் கலையுணர்வும் கடவுள் உணர்வும் பெருகி நன்னெறியெய்தி இன்புற்று வாழ உண்மைத் துணை செய்யும் எழில்நூலாகும் ஒரு நாட்டின் பழமை உணர்ந்தாலன்றி அந்நாட்டின் கிழமை கொண்டாடி முன்னேற முடியாது. வெளிநாட்டவர்களும் அறியா நாகரிகக் கருவூலமாக விளங்கும் தமிழகத் திருக்கோவிற் கலைகளின் உண்மை உணர்தற்கு இந்நூல் அனைய நூல்கள் இன்றேல் வேறு வழிகளில்லை இந் நூலின் அரும் பெறல் ஆசிரியர் திரு. காளத்தி, **நடேச முதலியார்** அவர்கள் ஆவர் இவர்கள் சிவநெறிப் பற்றும் நல்லொழுக்கமும் வாய்த்த பெருந் தகையார். திருவல்லிக்கேணி, திரு நடராச கல்விக்கழகத் தலைவர், லாயல அச்சக உரிமையாளர், நிழல் ஓவியம் எடுக்கும் திறலர். இத்தகைய வாய்ப்புக்களால் இவர்கள் இந்நூலை மிகவும் அழகுபெற அமைத்துள்ளார்கள்

இவர்கள் கருத்தொத்த கற்புறுமனைவியார் ஞானம்பாளுடன் 1949-ஆம் ஆண்டுமுதல் இன்றுகாறும் பற்பல திருவூர்களும் சென்று திருக்கோவில் வழிபாடு சீர்பெற இயற்றியுள்ளார்கள். இவர்கள் சென்றுள்ள திருக்கோவில்கள் இருநூற்றுக்குமேல் எனத் தெரிகின்றது. அத்திருக்கோவில் முறைகளை அகரவரிசையில் அழகுற அமைத்துள்ளார்கள்.

ஒவ்வொரு திருக்கோயிலின் சிறப்பும், சிறப்புமிக்கவற்றின் அழகிய நிழலுருவப் படமும், படவிளக்கமும், இறைவன் இறைவியர் திருப்பெயர்களும் திருமுறைத் திருப்பாட்டுக்களும் அமைத்துள்ளார்கள்.

புகைவண்டி நிலையங்கள், சந்திப்புக்கள், அவ்வவற்றுக்குள்ள தொலைவுகள், வழிகள், கட்டணங்கள் எல்லாம் செவ்வையாகக் காணப்படுகின்றன. அதுபோலவே நிலப்பொறியூர்தியாகிய பஃச வசதிகளும் குறிக்கப்பட்டுள்ளன. திருவூர்ச் சிறப்பு, திருக்கோயில் விளக்கம், ஆங்காங்குள்ள அரிய திருவரலாறுகள் ஆராய்ச்சிக் குறிப்புடன் அமைத்துள்ளார்கள். பொதுவாக நோக்கின் இந்நூல் பெரும்பான்மையான தமிழகத்தின் தொன்மையொடு பொருந்திய தற்காலம்வரையுள்ள நன்மை வரலாறென்றே கூறலாம். திருமுருகன் திருவூர்களும் வேறு பல சிறந்த திருவூர்களும் கிளந்தெடுத்துக் கூறப்பட்டுள்ளன. இந்நூலைச் செந்தமிழன்பர்களும் பிறரும் வாங்கியும் வாங்குவித்தும் வாங்கிப் பெரும் பயன் எய்துவார்களாக. ஆசிரியரவர்கட்குத் தமிழகமும் சிறப்பாகச் செந்நெறிச் செல்வர்களும் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள். அவர்கள் காட்டிய நன்னெறியைப்பற்றி எல்லாரும் ஒழுகுவராயின் நாடும் மொழியும் நன்னெறியும் பீடுறும்; வேற்றுமை அகலும்; ஒற்றுமை பெருகும்; வாழ்வு சிறக்கும்.

திருமந்திர விளக்கம்

[ஆசிரியர் யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்; வெளியிட்டோர் 'சுத்தானந்தப் பதிப்பகம்;' கிடைக்குமிடம் · 60, டீல் இடம், கொழும்பு, 3· விலை, ரூ 2 சதம், 50, (2-8-0)]

எளிய இனிய நடை, திருப்பாட்டுக்களின் பொருள்களை ஆற்றொழுக்காகக் கட்டுரைபோல் அமைத்துக்கூறி வேண்டுமிடத்துச் சிறந்த திருப்பாட்டுக்களை முழுவதுமாகவும், வேண்டிய அளவாகவும் எடுத்துக்காட்டிக் கற்பாரை இன்புறச் செய்யும் எழில் வாய்ந்தது. சிறந்த பல யோகக் கருத்துக்களும் செந்நெறி மாண்பும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. 'மூலமந்திரமுதல், ஓம் சிவம்' என்பது ஈறாக (௬௰) அறுபத்தைந்து தலைப்புக்களில் மிக விளக்கமாகத் திருமந்திரத் தமிழ்ப் பிழிவு தரப்பட்டுள்ளன. பொதுவாகப் பார்த்தால் திருமந்திரப் பிழிவாய்த் திருமந்திர முழுவதும் கற்பார்க்குச் சிறந்த வழிகாட்டியாய்த் திகழ்கின்றது இந்நூலைத் தமிழகத்தார் வாங்கியும் வாங்குவித்தும் பழந்தமிழ் ஓம்புவதுடன் பதிப்பகத்தார் ஆக்கமுற ஊக்குதலும் செய்வார்களாக. பதிப்பகத்தாரும் இம்முறையில் திருமந்திரம் முழுதும் முற்றுவிப்பார்களாக. பிற நூல்களையும் வெளிப்படுத்திப் பெரும்பயனார் பெரும்பணி புரிவார்களாக. அழகிய பதிப்பு

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.